விலை: 20/=

# நமது முரசொலி


செய்வது துணிந்து செய் சொல்வது தெளிந்து சொல்

නමදූ මුරසොලි

Namathu Murasoly

வார இதழ்

முரசு - 01 (20.09.2013 - 26.09.2013) திருவள்ளுவர் ஆண்டு: 2044 முழக்கம் - 04




நல்லவை நாளும் விளைய உண்மையை நேர்மையாய் ஒலிக்கும் நமது முரசொலி

# வெல்லப்போவது யார்?

## ஒரு கேள்வி பல முகம்

வடக்கு மாகாணத்தில் நாளை நடைபெறவுள்ள வடமாகாணசபைத் தேர்தலில் வெல்லப்போவது யார் என்ற கேள்வி பலரால் கேட்கப்படுகிறது. வடக்கு மாகாணத்தில் உள்ளவர்களைவிட அதற்கு வெளியில் உள்ளவர்களாலேயே இந்த வினா பெரிதும் எழுப்பப்படுகின்றது. வடக்குமாகாணத் தினை பொறுத்தவரை அவதானிக்கப்பட்ட மக்கள் அலைகள் மற்றும் கருத்துக் கணிப்புக்களின் பிரகாரம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பெருவெற்றி பெறும் என்பது உறுதியாகி வருகின்றது. வெளியில் உள்ளவர்களுக்கு இச்செய்தி 22ம் திகதிக்கு பின்னர்தான் உறுதி செய்யக்கூடியதாக உள்ளது எனினும் இங்குள்ளவர்களுக்கு அது தெரிந்த முடிவாயிருக்கின்றது. அரசதரப்பு வேட்பாளர்கள் பலர் இதனைத் தமது ஆதரவாளர்களிடத்திலும், ஏன் சில கூட்டங்களிலும் தாமே கூறிவருகின்றனர்.

> முதிர்க்கன்னியின் திருமணம் போல் காலம் தாழ்ந்து வந்தாலும் வடமாகாண சபை தேர்தல் எல்லோரது கவனத்தையும் பெற்றிருக்கிறது. சர்வதேச சமூகம், புலம் பெயர் தமிழர், தென்னிலங்கை மக்கள், பத்திரிகையாளர் என எல்லோரது அவதானமும் வடமாகாண சபைப் தேர்தல் மீது குவிந்துள்ளது. சிறு சலசலப்பு, சில கலந்துரையாடல்களுடன் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் C.V. விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறக்கபட்டு, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பிரச்சாரங்கள் என்றுமில்லாத தீவிர ஈடுபாட்டுடன் முன்னெடுக்கப்படுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி உறுதி என்ற நிலையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்காகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பும், மத்தியில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரகூட்டமைப்பும் தன் வாக்கு வங்கியையும், பிரதிநிதித்துவத்தையும் அதிகரிப்பதற்காக பெரும் பிரயத்தனத்தோடு உள்ளன. எனினும் மக்களின் வாக்களிப்பு வீதம் அதீதமாக அமைதல் நிச்சயமற்றே காணப்படுவதால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெறுதல் சவாலான ஒன்றாகவே அமையும்.
>
> **பவித்திரன் அமிர்தலிங்கம்**
> **கொக்குவில்**

இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை இங்குள்ள வாக்காளர்களில் கணிசமானவர்களுக்கு இம்முறைதான் வாக்களிக்கும் சந்தர்ப்பத்தினை முதற் தடவையாகப் பயன்படுத்த உள்ளனர். பலர் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் தேர்தல்களைப் புறக்கணித்து வந்துள்ளமையும், இடம்பெயர்வின் காரணமாக வாக்களிப்பு நிலையங்கள் அவர்களது சொந்த இடங்களில் இல்லாது இருந்த நிலையும் இதற்குக் காரணம் ஆகும்.

பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நடைபெற்ற தேர்தல்களில் அரச தரப்புக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் மாறிமாறி அவர்கள் கேட்ட ஆணைகளுக்குப் பதில் வழங்கி, மக்கள் தமது நிலையினைத் தெரிவித்து வந்திருந்தனர். அத்தகைய தேர்தல்கள் கணிசமான அதிகாரங்களுடன் ஆட்சியை அமைக்கக்கூடிய ஒரு அரசியல் கட்டமைப்புக் குரிய தேர்தல்களாக அவை அமைந்திருக்கவில்லை. சனதிபதித் தேர்தலாக இருந்தால் என்ன பாராளுமன்றத் தேர்தல் களாக இருந்தால் என்ன உள்ளூராட்சி சபைகளுக் கான தேர்தலாக இருந்தால் என்ன அவற்றில் இடங்களை கைப்பற்றுவதன் மூலம் எதனையும் சாதித்துவிட முடியாது இருப்பினும் நடைபெறவுள்ள வடமாகாணசபைத் தேர்தலானது முற்றிலும் வேறுபட்டதாகக் காணப்படுகின்றது. சர்வ தேசத்தின் கவனம் கூட இந்த தேர்தல் மிகவும் இறுக்கமாகப் பதிந்திருக்கின்றது. இந்தியாவின் ஆதிக்கமும் நிறையவே உள்ளது.

எனவே வடமாகாணசபைத் தேர்தலில் மக்கள் கூடிய அக்கறையுடன் இருப்பதில் வியப்பேதுமில்லை. இந்த தேர்தலில் கூட்டமைப்பின் வெற்றியினை உறுதிசெய்யக் கூடிய நிறைய காரணிகள் முன்னரே தென்படத் தொடங்கியிருந்தன. அதற்கு அரசாங்கமே பலவழிகளிலும் வழிகோலியிருந்தது. மனித உரிமை குறித்த சர்வதேச நெருக்கடி, காணி சுவீகரிப்பு, காணாமல்போனோர் விவகாரம் இறுதிப்போரில் சரணடைந்தவர்கள் நிலை குறித்த தெளிவின்மை போன்ற காரணிகளை இங்கு குறிப்பிடலாம்.

இது தெரிந்தோ என்னவோ அரசாங்கத்துடன் இணைந்து அரசியல் செய்கின்றவரும், முதலமைச்சராக தானே வருவேன் என கூறிக் கொண்டிருந்தவருமான அமைச்சர் கூட இத் தேர்தலில் தான் போட்டியிடாது ஒதுங்கி, தன் கட்சியின் மற்றவர்களுக்கு வழி விட்டிருந்தார். அரசாங்கத்தினைப் பொறுத்தவரை வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுகின்றவர்களில் குறிப்பிட்ட தொகை யினரேனும் வெற்றிபெற வேண்டும் என்ற அவாவிலேயே தொழிற்படுகின்றது. அதற்கு அரச தலைவர் தொடங்கி அமைச்சர்கள் வரை தமது முழுவளங்களையும் எந்த வித மட்டுப் பாடுகளுமின்றி பயன்படுத்தி வருகின்றனர்' அவர்களைப் பொறுத்த வரை ஆட்சி யைப் பிடிப்பதல்ல நோக்கம், ஆனால் தமக்கும் மக்கள் ஆதரவு இருக்கின்றது என்பதைக் காட்டுவதே ஆகும். தற்செயலாக வெற்றிலை அணி ஆட்சியை பிடித்தால் அது அவர்கள் எதிர்பாராத ஒன்றாகத்தான் இருக்கும்.

இறுதி நேரத்தில் வெற்றிலை அணியினரின் உள்வீட்டுச் சண்டைகள் கூட வெற்றிவாய்பினை குறைத்திருக்கின்றது. அத்துடன் கட்சிகளுக்கிடையிலும் ஒற்றுமை இருக்கவில்லை. வெற்றிலைக்குள்ளும் அழுகினது, வாடினது இருக்கும் என்று கூறியதன் மூலம் அமைச்சர் அதனை சூசகமாகக் கூறியிருந்தார். நவநீதம் பிள்ளையின் வருகை, இறுதிப்பேச்சில் தெரிவித்த கருத்துக்களும் அரச தரப்புக்கான ஒரு பின்னடைவே.

இதேவேளை, முதலமைச்சர் தெரிவில் கூட்டமைப்பில் வெடித்த சண்டை மற்றும் அதற்கெதிரான விமர்சனங்களும் இன்னும் ஓய்ந்தபாடில்லை. அதனையே அரசதரப்பும் அடிக்கடி ஞாபகப்படுத்தி வருகின்றது. இருப்பினும் விக்கினேஸ்வரன் தெரிவுசெய்யப்பட்ட உடன் எழுந்த எதிர்ப்பு அலைகள் ஊடகங்களின் பார்வைகள் மெல்ல மெல்ல மறைந்துள்ளன.

கூட்டமைப்பு தொடர்பில் பலர் தெளிவாக புரிந்து வைத்துக் கொண்டுள்ளனர் வாக்களிக்க முடிவுசெயதவர்களிடம் உள்ள ஒரு காரணம் அவர்களுக்கு வழங்குவதற்குரிய இறுதி சந்தர்ப்பம் இது என்றும், அதன்பிறகும் வழிக்கு வரவில்லையென்றால் வேறு சிந்திப்போம் என்பதுவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கு எதிரான சரியான தெரிவு அவர்களிடம் தற்போது இல்லை என்பதுவும் ஆகும்.

அவர்களில் பலர் கூட்டமைப்புக்குரிய பதிலீடாக அரச தரப்பினை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள தயாரில்லை. கூட்டமைப்புக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டிருக்க கூடிய, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியைச் சந்தித்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும், முதலில் இருந்து கூட்டமைப்பினை ஆதரித்த சிவில் சமூகமும் கூட்டமைப்பிற் கான மாற்று சக்தி ஒன்றை உருவாக்க பின்னின்றமையும் பலரால் விமர்சனக்கண் ணோட்டத்துடன் நோக்கப்படுகின்றது. விரும்பியோ விரும்பாமலோ அந்த மாற்று அணிக்கான தகுதிகாண் பரீட்சையாகக்கூட இந்த தேர்தல் மற்றும் அதன்பின்னரான ஆட்சி அமையப்போகின்றது என்பதையும் மறுப்பதற்கில்லை.

கூட்டமைப்புக்கு எதிரானவொரு மாற்றுவெளியை உருவாக்கத் தவறியமை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியையும் சிவில் சமூகத்தினையும் சாரும்!

கருத்துக்கணிப்புக்கள் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு வெற்றிபெறும் என்று கூறி நிற்கின்ற போதிலும், நியாயமான நேர்த்தியான இதய சுத்தியுடனான அரச எதிர்ப்புத்தளத்தினை நமது மக்கள் கொண்டிருக்கவில்லை என்ற கவலை பலரிடத்தில் இருக்கத்தான் செய்கிறது. வீட்டுக்குப் புள்ளடியிடப் போகின்றவர்களில் பலரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பான நிறைய விமர்சனங்கள் உள்ளன. இந்த மாகாணசபையால் எதுவும் சாதித்துவிட முடியாது என்ற போதிலும் நீதியரசர் தனது சட்ட நுணுக்கங்கள் ஊடாக ஏதாவது அதிச யங்கள் செய்வாரோ என்ற எதிர்பார்ப்பிலும் பலர் உள்ளதை அறிய முடிகிறது. அதனைக் கட்டியம் கூறும் வகையில் தேர்தல் விஞ் ஞாபனம் இருந்த போதிலும் இருதரப்பு மீதும் விசாரணை வேண்டும் என்பதை வேட்பாளர் களில் ஒருவரான அனந்தி எழிலன் எதிர்த்து நிராகரித்திருந்ததையும் இங்கு குறிப்பிட வேண்டும். காணாமல் போனவர்களின் உறவினர் மத்தியில் அவரது குரல் ஓங்கி ஒலிப்பதையும் காணமுடிகிறது.

> மக்குள்ளே பதவியாசை வேண்டாம். எமது ஒற்றுமையை வெளிக்காட்டவே நாமெல்லோரும் தமிழ் தேசிய கூட்டமைப்பை ஆதரிக்கவேண்டிய காலத்தின் தேவையில் உள்ளோம். இந்த ஒற்றுமையென்பது சர்வதேசத்திற்கு காட்டுவதற்காக மட்டுமல்ல எம்மை அடக்கி அடிபணியவைத்து ஆளநினைப்பவர்களுக்கு அபாய எச்சரிக்கைக் கான ஒற்றுமையும் கூட. சிரியாவில் 1430 பேர் நச்சுவாயுவினால் கொலைசெய்யப்பட்டதற்காக அவ் அரசாங்கத்திற்கு எதிராக போர்தொடுக்க முற்படும் சர்வதேசம், தடை செய்யப்பட்ட ஆயுதங்களினால் 40000ற்கு மேற்பட்ட எம்மினத்தவர்கள் படுகொலை செய்யப்பட்டபோது என்ன செய்தது? நம்மை நாமே ஆள்வதற்கு நமக்கு ஒருவரும் உதவி செய்யப்போவதில்லை. எனவே எமக்குரிய உரிமைகளை நாமே ஒற்று மையாக இருந்து எமக்கே உரித்தான வழியில் பெற்றுக்கொள்வோம்.
>
> **பரமேஸ்வரன் ரூபன்**

வேட்பாளர்களின் முரண்பாடான கருத்துக்களுக்கு மத்தியில் முதலமைச்சர் வேட்பாளரான முன்னாள் நீதியரசரான விக்கினேஸவரன்மீது புலம்பெயர் தமிழர்கள் மற்றும் இந்தியத்தமிழர்களிடம் அவரது பேட்டிகளினால் ஏற்பட்டு இருந்த வெறுப்புணர்வு மறைந்து, புலிகளின் தலைவர் பிரபாகரனை மாவீரன் என்று கூறியதன்மூலம் வளர்ந்த நிலை, தற்போது மீண்டும் தமிழரும் சிங்கள வரும் கணவன் மனைவி உறவுள்ளவர்கள் என்று கூறியதன் மூலம் கேள்விக்குள்ளாகி யிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. விமர் சனங்களுக்கு அப்பால் வடமாகாண மக்க ளில் பலர் விரும்பியோ, விரும்பாமலோ வீட்டு க்கே வாக்குப் போடவேண்டும் என்ற நிலை யில் இருப்பதையும் மறுப்பதற்கில்லை.

**36 இடங்களில் கூட்டமைப்பு 25 இடங்களை வெல்வது உறுதி எனக் கூறலாம். 10 இனை அரசும் 1 இனை (யாழ்ப்பாணத்தில்) ஐக்கிய தேசிய கட்சியும் பெறலாம்.**

உணர்ச்சிக்கு ஆட்பட்ட சாதாரண மக்கள் எதற்கும் பதில் கூறாமல் கண்மூடித்தனமாக வீட்டுக்குபோட போகின்றார்கள். அடுத்த பக்கத்தில் நடுவு நிலமையுடன் நிற்பவர்கள் என்று தம்மைச் சொல்லுகின்றவர்களில் ஒருபகுதி கூட்டமைப்பினை விட வேறு தெரிவு தமக்கு இல்லை என்கிறார்கள். இன்னொரு தரப்பு சரி வெற்றிலைக்கே போடலாம் என்கிறது. இன்னும் ஒரு பிரிவினர் ஒன்றுமே வேண்டாம் என்று ஒதுங்கி கொள்கின்றனர்.

இப்படியிருக்க, இன்றைய நிலையில் கருத்துக் கணிப்பிற்கு அமைவாக மக்களின் தெரிவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இருக்கின்றது அடுத்ததாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இருக்கிறது. ஆசனங்களைப் பொறுத்த வரை மொத்தம் உள்ள 36 இடங்களில் கூட்டமைப்பு 25 இடங்களை வெல்வது உறுதி எனக் கூறலாம். ஏனைய இடங்களில் 10 இனை அரசும் 1 இனை (யாழ்ப்பாணத்தில்) ஐக்கிய தேசிய கட்சியும் பெறலாம். கூட்டமைப்பில் விக்கினேஸ்வரன் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெறுவார். என்பதில் ஐயமில்லை. சுயேச்சைகள் அனை த்தும் தோல்வியைத் தழுவும் என்றே தெரி கிறது. அரசதரப்பில் இளையவர் தரப்பில் அங்கஜன் இராமனாதனின் குரல் எடுபடுவதாகத் தெரிகிறது. அது வேலைவாய்ப்பினை நோக்கி மையம் கொள்வதையும் அவதானிக்க முடிகிறது. அதைவிட அரசதரப்பில் உள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் முதன்மை வேட்பாளரும் தன்பங்கிற்கு தனது இடத் தினை உறுதிசெய்ய பெரிதும் முயன்று வருவைதைக் காணமுடிகிறது. குறிப்பிடக்கூடியளவு இல்லாது விடினும் ஓரளவுக்கு வேட்பாளர்கள் மக்களின் தெரிவுக்கு இரு பக்கமும் இருப்பதாகவே தெரிகிறது. இருப்பினும் எது எப்படியோ சின்னங்கள்தான் இங்கு முன்னிலையில் மக்களிடம் பேசப்படுகின்றது.

– தங்கராஜா தவரூபன் –

நமது
முரசொலி
நமது முரசொலி
Namathu Murasoly
வார இதழ்
04

இல.: 18/1, இளையதம்பி ஒழுங்கை, செம்மணி வீதி, நல்லூர்.
E-mail : namathumurasoli@gmail.com, Tel : 0773673829

# நமது முரசு ஒலிக்கட்டும்

வணக்கம்!

வடமத்திய, மத்திய மற்றும் வடமாகாண சபைகளுக்கான தேர்தல் நாளை நடைபெறவுள்ளது. இவற்றுள், வடக்கு மாகாண சபை தேர்தலும் அதன் முடிவும் பெரும் எதிர்பார்ப்புடன் நோக்கப்படுகின்றது. உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் உன்னிப்பாக அவதானிக்கப்படுகின்ற வடக்குத் தேர்தலில் வெளிவரும் தீர்ப்புக்கள், தமிழ்மக்கள் தங்கள் வாக்குகள் மூலம் வழங்கியுள்ள தங்கள் அபிலாசை பற்றிய ஆணையாகவே கருதப்படவுள்ளது.

ஆயுதப்போராட்டத்திற்குப் பின்னர் தமிழ் மக்களின் அரசியல் போராட்டம் தீர்க்கமான கொள்கையொன்றின் மீது வடிவமைக்கப் பட்டு, அதனை நோக்கி, நிலையூன்றி, முன்னேறிச் செல்ல வேண்டியதொரு அவசியமான காலக்கட்டுறுத்தினை அடைந்துள்ளது. ஆதலினால், இந்த அரசியல் பயணத்திற்கு, கொள்கைமீது பற்றுள்ள, அர்ப்பணமுள்ள தமிழ்த்தலைமையைத் தெரிவு செய்ய, அக்கடமை நிறைவேற்ற, நாளைய வாக்களிப்பை வட பகுதியைச் சேர்ந்த அனைவரும் முதன்மையாகக் கருதி, முழுமையாகப் பங்கெடுக்க முன்வரவேண்டும். நாளை நடைபெறவுள்ள தேர்தலைப் பயனுள்ளதாகவும், எமது ஆணையை மீண்டுமொரு பதிவு செய்யுமொரு வரலாறாகவும் மாற்ற வேண்டியது தமிழ் மக்கள் அனைவரதும் தலையான கடமையாகும். உண்மையும், கடமையில் நேர்மையும், தேசியத்தில் கொள்கைப்பற்றும், தம் தேசம் சார்ந்த நலனிலும், தம் தேச மக்களின் அபிலாசைகளிலும் அயராது பங்கெடுக்கக் கூடியவர்களைத் தமிழ் மக்கள் தம் தலைமைகளாக அங்கீகரித்து, ஆணை வழங்க வேண்டும். இந்தச் செய்தி சர்வதேசத்திற்கும் தென்னிலங்கைக்கும் விடுக்கும் தமிழ்த்தேசிய வாழ்வுரிமைக்கான வரையறையாகவும், குறிகாட்டியாகவும் இருக்க வேண்டும். இலவசங்களுக்காக இறையையைத் தாரை வார்க்காது, தம் அடையாளங்களை மறந்து அனைவரும் ஒன்றே என்ற பொதுப் பயணத்தில் இணைந்து பயனிப்பவர்களைத் தமிழ் மக்கள் தெளிவாக இனங்கண்டு கொள்ள வேண்டும். புதிய சமூக ஒழுங்கையும், அரசயில் கலாசாரத்தையும், சமூக வரலாற்றையும் கட்டியெழுப்புவதற்கான ஆதரவை மக்கள் தேர்தல் மூலம் வழங்க வேண்டும். இந்த உண்மையை, முக்கியத்துவத்தை உணர்ந்து, அனைவரும் சென்று வாக்களிக்க வேண்டும். கடந்த காலத் தேர்தல்களில் வாக்களிப்பு வீதங்கள் குறைவாக இருந்தன மட்டுமன்றி அளிக்கப்பட்ட வாக்குகளில் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை கணிசமாகக் காணப்பட்டதையும் சற்றுக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். எனவே வாக்களிப்பின் போது நிதானத்தைக் கடைப்பிடித்து, தெளிவாக வாக்கிளத்து, சனநாயக ஆட்சியில் பங்குகொள்ளுவதற்கான வாய்ப்பினைப் பயனுறச் செய்யும் வகையில் முழுமையாகவும், சரியாகவும் வாக்களிப்பினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதன்மூலம் திருப்திகரமான வாக்களிப்பையும், தீர்க்கமான முடிவையும் வெளிப்படுத்தி நிற்க முடியும்.

பெரும் ஆரவாரங்கள், ஆர்ப்பரிப்புக்கள், சவால்கள், சர்ச்சைகள், மோதல்கள், உட்பூசல்கள் என நீண்டு சென்று பல்வேறு அசெகரியங்களுடன் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முடிந்து விட்டிருக்கின்றன. இருப்பினும் இந்த ஆர்ப்பாட்ங்களுக்கும், ஆரவாரங்களுக்குமான பதில்களை தேர்தல் முடிவின் போது நாம் தெரிந்துகொள்ள முடியும். அத்துடன், மக்கள் வழங்கவுள்ள தீர்ப்புக்குக் கட்டுப்பட்டவர்களாக மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்துள்ளார்கள் என்று மதிப்பளித்து, நாகரீகமான அரசியல் கலாசாரத்தைப் பேணுதல் வேண்டும். தேர்தலின் பின்னர் உள்வீட்டு முரண்களையும் வசைபாடுதல்களையும் தவிர்த்துச் செயற்படுதல் வேண்டும்.

உலக சமாதான தினத்தன்று, வட பகுதியில் இருந்து வெளிவரவுள்ள தமிழ் மக்களின் தீர்ப்பானது, அமைதியான வாழ்வுக்கு தமிழ்மக்கள் எடுத்துரைக்கும், வலியுறுத்தும் ஆணையாக, நமது எதிர்காலம் எத்தகையதாக இருக்க வேண்டும் என்பதனை நாமே அறைந்து கூறும் நிற்கும் முரசமாக ஒலிக்கட்டும்.

தமிழ் மக்கள் ஒவ்வொருவரினது வாக்கிலும் நமது முரசு ஒலிக்கட்டும்.

# பறிக்கலாம் கிழிக்கலாம் எரிக்கலாம் ஒலிக்காது ஓயாது முரசு...

நமது முரசொலி பத்திரிகை இந்த முழக்கத்துடன் நான்கு தடவைகள் மாத்திரமே முழங்கியுள்ளபோதும் அதன் முழக்கவொலி சிலருக்கு அச்சத்தையும் எரிச்சலையும் பலருக்கு ஊடகம் மீதான நம்பிக்கைகளையும் உண்டுபண்ணியுள்ளது. முரசொலியின் முழக்கத்தின் பின்னர் தங்கள் பிரதிபலிப்புக்களை பலவிதங்களில் எமது வாசகர்கள் காண்பித்திருக்கின்றார்கள். முரசொலியின் வெளிவருகைக்குப் பின்னான பின்னணி என்ன? யார் யார் இதனை வெளிக்கொணர உழைக்கின்றார்கள்? என்றவாறான பல கேள்விகளுக்குப் பலர், பல்வேறு விதமான பதில்களை பகிர்ந்திருக்கின்றார்கள். எது எப்படியாயினும், முரசொலியின் முக்கிய நோக்கம் ஆற்றலும், வல்லமையும் கொண்டு எங்கள் தமிழ்ச் சமூகத்துக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்ற விளையும் எவரும் சற்று தங்கள் பாதையில் கவனக்குறை வாக இருக்கும் போது அவர்கள் தூக்கத்தைத் தட்டி எழுப்பி அவர்களை உற்சாகப்படுத்துவதும், புதிய வழிகளையும் அவர்கள் பயணத்தில் உள்ள தடைகளையும் அடையாளம் காட்டுவதுமே ஆகும்.

இருந்தபோதும், ஊடகம் ஒன்றுக்கு இருக்கும் திமிர் மற்றும் இயல்பு என்பவற்றின் அடிப்படையிலும் வாசகவட்டத்தைச் சென்றடையும் நோக்கத்துடனும் சில விடயங்களை சிலமாதிரிச் சொல்ல விழைவது என்பது முரசொலியின் தனித்துவம். அத்தகைய தனித்துவம் சிலருக்கு கொதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளமையை அறியமுடிகின்றது.

இதற்கு ஆதாரமாக அண்மையில் அளவெட்டியில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் பிரச்சாரக் கூட்டத்தில் முரசொலியின் அறிமுகத்துக்காக சில பிரதிகளை எமது ஊடகப்பணியாளர்கள் இலவசமாக மக்களுக்கும், வருகை தந்திருந்த அரசியல் பிரமுகர்களுக்கும் வழங்கியிருக்கின்றனர். இதனை ஏற்றுக்கொள்ள முடியாத, நிகழ்வுக்குத் தலைமை வகித்த வலிவடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் வழங்கப்பட்ட பத்திரிகைகளை அரசியல் தலைவர்களிடமிருந்து பறித்தெடுத்து, அவற்றை எமது ஊடகப் பணியாளர்களின் முன்னிலையில் கிழித்தெறிந்து, ஏனைய பிரதிகளையும் வழங்கக்கூடாது என தனக்கே உரித்தான பாணியில் பாய்ந்திருக்கின்றார்.

இந்தப் பிரதிபலிப்பை முரசொலியின் முதலாவது பத் திரிகையில் அவர் குறித்து வந்த செய்திக்கான எதிர்வினையாகவே எமது ஆசிரியபீடம் கருதிக்கொள்கின்றது. சுகிர்தன் அவர்களுக்கு ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட விழைகின்றோம். எமது பார்வையில் ஊடகங்களுக்கு இருக்கும் மிகப்பெரிய பொறுப்பு என்பது சமூகத் தலைமைகளிடம் மிக நெருக்கமான நட்புறவைப் பேணுவது என்பதாகும். அதனடிப் படையிலேயே முரசொலி அனைவரிடமும் தனது நட்பு கரங்களை நீட்டுகின்றது. அந்தக் கரங்களை மறுதலிப்பதும் அல்லாது இறுகப்பற்றிக் கொள்வதும் மறுதரப்பின் முடிவு. அதில் நாம் தலையிட முடி யாது. ஆனால் ஒன்றை மட்டும் சமூகத்தலைமைகள் புரிந்து கொள்ள வேண்டும் என்பது முரசொலியின் விருப்பு.

அதாவது உண்மையான நட்பு என்பது வள்ளுவர் சொல்வது போல்

"நகுதல் பொருட்டன்று நட்பு மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு" என்பதே முரசொலியின் நிலைப்பாடாகும். வெறும் புகழ்ச்சி வார்த்தைகளையும், பசப்பு எழுத்துக்களையும் பரவவிட்டு ஒரு உணர்ச்சி அரசியலையோ ஊடகவெளியையோ உருவாக்க முரசொலி விரும் பவில்லை. தட்டிக்கொடுக்க வேண்டிய இடத்தில் தட்டிக்கொடுத்தும் சுட்டிக்காட்ட வேண்டிய இடத்தில் சுட்டிக்காட்டியும் நகரவே முரசொலி முயல்கின்றது. முரசொலியின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவும் ஆரோக்கியமான விதத்தில் தங்கள் கருத்துக்களை முரசொலியுடன் பகிர்ந்து கொள்ளவும் சமூகத்தலைமைகள் முன்வரவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப் பாகும்.

விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் கொண்டவர்களே உண்மையான அரசியல் தலைமைகளாக இருக்கத் தகுதியுடையவர்கள். மாறாக சொந்த நிகழ்ச்சி நிரல்களை முன்னிலைப்படுத்தி அதற்காக எவ்வளவு தூரமும் படியிறங்கிச் செல்லவும், போட்டுக் கொடுப்புக்களையும் காட்டிக்கொடுப்புக்களையும் தயக்கமின்றி செய்யவும், ஒரே கூரைக்குள்ளேயே இவர் அந்த அறைக்குச் சொந்தக்காரர் அவர் இந்த அறைக்குச் சொந்தக்காரர் என பாகப்பிரி வினை செய்யவும் முயலும் தலைமைகள் தொடர்பில் முரசொலிக்கு பல்வேறு விமர்சனங்கள் இருக்கவே செய்கின்றன. பாவப்பட்ட ஒரு இனம் தன் எதிர்காலத்தை அடகு வைத்துவிட்டு மீட்பதற்கு காத்திருக்கும் வேளையில், தாங்கள் தான் அந்த இனத்தின் மீட்பர்கள் என அவதாரம் எடுக்கவும் அரிதாரம் பூச முயல்வோரும் சற்றுப் பொறுமையோடு நிதானமாகச் சிந்தியுங்கள். உங்கள் முன்னான பொறுப்புக்கள் அதிகம் பரவிக்கிடக்கின்றன. அதனை நிறைவேற்றத் தங்களைத் தயார்ப்படுத்துவதே முரசொலியின் நோக்காகும். அதனைத் தவறாக விளங்கிக் கொண்டு ஒரு ஊடகத்துக்கெதிராக உங்கள் சிறுபிள்ளைத்தமான அணுகு முறைகளைப் பிரயோகிக்க முயலாதீர்கள். அவை உங்களுக்கு மட்டுமல்ல எங்கள் இனத்துக்கும் மோசமான விளைவுகளைத் தரவல்லன.

இவ்விடத்தில் இன்னொரு விடயத்தையும் சுடடிக்காட்ட விரும்புகின்றோம். சிங்கள மக்களுக்கு நல்ல தலமையை கொடுத்தவராக கருதப்படும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச அவர்கள் தன்னைக் கேலிசெய்து கேலிச்சித்திரம் வரையும் ஊடகவியலாளர்களுக்கு அடிக்கடி விருந்து வைத்து இன்னும் நிறைய தன்னை வரையச் சொல்லி அவர்களை உற்சாகப்படுத்துவாராம். அது போன்றே ஜே.ஆரும் என்று சொல்கின்றார்கள். மேலைத்தேயத் தில் இது சகஜமான பாணி. இந்த ஆரோக்கியமான தன்மைகளை எமது அரசியல் களத்துக்குள் அனுமதிக்காத வரை எமது இலக் கை அடைதல் என்பது மிக்க கடினமானதே.

விமர்சனங்களைத் தனிப்பட்ட காழ்ப்புணர்வுகளில் எழுதுகின்றார்கள் என வியாக்கியானம் செய்வதும், விளம்பரத்துக்கு எழுதுகின்றார்கள் என தங்களை திரைப்பட நாயகர்கள் போல் உருவகம் செய்வதும் சற்று அதிகமானவை. தமிழ்ச் சமூகத்தின் காயங்களுக்கு மருந்திட விழையும் முரசொலி தனது பாதையில் மிகத் தெளிவாக இருக்கின்றது. யாரையும் துதிபாடவோ அல்லது தூற்றவோ முரசொலி ஒருபோதும் துணியாது. ஓடுகின்ற குதிரைகளுக்கு தண்ணீர் வைக்கவும், ஓடக்கூடிய குதிரைகளை பந்தயத் தடத்தில் இறங்கவைக்கவுமே முரசொலி ஒலிக்கும். இந்த நல்லெண்ண த்தை எமது சமூகத் தலமைகள் புரிந்து கொள்ளல் காலத்தை எங்கள் வசமாக்கும். அன்றி இன்னும் காத்திருப்புக்கள் தொடர்ந்த வண்ணமேயிருக்கும்.

**பல்லவன்**



# தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம்

## இது தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் விடுக்கும் அறைகூவல்...

எமதினியஅன்புறவுகளே..வணக்கம்.

உங்களோடு பகிர்ந்து கொள்ள ஏராளமான விடயங்கள் உள்ளன. இது மாகாணசபைக்கான தேர்தல் காலம். பல்வேறு தரப்பினராலும் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்படுகின்ற இவ்வேளையில் வாக்களிக்கும் உரிமையுள்ள எமது கடமைகள் என்ன?

வாக்குகளைச் சரியான முறையில் அளித்து எமது விருப்பிற்கு அல்லது நம்பிக்கைக்குரியவர்களிடம் எமது தலைமுறை வாழ்ந்த மண்ணின் ஆட்சியை ஒப்படைப்பது என்று எல்லோருமே கூறுவீர்கள்.

ஆட்சி எனும் போது அவ்வாட்சி அதிகாரங்கள் பெரிதாக இல்லாமலிருக்கலாம்-சாதிக்க முடிவது அற்பமாக இருக்கலாம்- ஏனெனில் மாகாண சபைகள் கொண்டுள்ள அதிகாரங்கள் உரிமைகள் தொடர்பான போதாமைகள் பற்றி பெரும்பான்மைச் சிங்களச் சமூகமே கேள்வியெழுப்பிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் பன்னாட்டுச் சமூகம் சற்றே கண் விழித்திருக்கிற சந்தர்ப்பத்தை சரியான பயனுறுதிமிக்க முறையில் பயன்படுத்துவது எமது கடமையல்லவா?

அப்படியாயின் யாரை ஆட்சிக்குத் தெரிவுசெய்வதன் மூலம் எமது கடமையைச் செய்யப்போகின் றோம்? காலம் காலமாக எம்மினத்தை அழித்தொழித்த இப்போதும் அதே சிந்தனையுடன் கலாசாரப் பிறழ்வை ஊக்குவித்துக்கொண்டு அல்லது கண்டும் காணாதது போலிருக்கும் ஆட்சியிலிருக்கும் கட்சியையா? அவர்களோடு கூட்டுவைத்துள்ளவர்களையா?? பெரும்பான்மையினக் கட்சிகளையா?? அவர்களது பிரதிநிதிகளையா?? ஏதொரு சிந்தனையுமின்றி நிற்கும் உதிரிகளையா-சுயேட்சை-??? யாரை? ???

எமக்கிருக்கும் ஒரே தெரிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக நிற்கும் தமிழரசுக் கட்சியே! என்பதில் மாற்றுக்கருத்தேதுமிருக்கமுடியாது. எமக்குள்ள தேவைகளை... எமது நியாயப்பாடுகளை.... எமக்கிருக்கும் வலிகளை சரியாக இனங்கண்டு குரல்கொடுத்து வென்றெடுக்கக்கூடிய ஆளுமைமிக்க சமூகப் பெறுமதியுள்ள வேட்பாளர்களை எம் முன்னிறுத்தியுள்ள தமிழ்தேசியக் கூட்டமைப்பினரை மாகாண சபைக்குத் தெரிவுசெய்து அனுப்புவது தான்.

தமிழினம் தமிழ் தலைமையையே வேண்டிநிற்கிறது எனும் உண்மையை ஒரே குரலில் ஒருமித்துச் சொல்ல எமக்குக் கிடைத்துள்ள அருமையான சந்தர்ப்பமாகவே நாம் இதனை எடுத்துக்கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதைச் செய்தார்கள்? என்று கேள்வியெழுப்புவோர் தாம் செய்ததாகக் கூறிப் பெருமைப்படுவதெல்லாம் என்ன? அபிவிருத்தி வேலைவாய்ப்பு... இவற்றின் பின்னணியிலுள்ள உண்மை பற்றி அறிவீர்களா?

அன்பிற்கினிய உறவுகளே! சிந்தியுங்கள்!!

அபிவிருத்தி என்று இவர்கள் எதைக் கூறுகிறார்கள்? இட்டுமுடிவதற்குள்ளாகவே பரவலாக விரிசல் கண்டு வரும் காப்பெற் நெடுஞ்சாலைகளையா? உள்வீதிகள் உள்ள நிலையினை நீங்களே நன்கறிவீர்கள். இந் நெடுஞ்சாலைகள் கூட அமைச்சர்களின் பயணத்திற்காகவும் தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகளுக்காகவும் நிதியினை வழங்கிய வெளிநாடுகளைத் திருப்திப்படுத்தவுமேயன்றி வேறொன்றுமில்லை எனும் உண்மையை உணர்ந்திருப்பீர்கள்.

மட்டுப்படுத்திய அளவில் தேவைகளை ஈடுசெய்ய முடியாத வெளிநாட்டரசுகளின் நிதியிலமைத்த அரைகுறைவீடுகளா?? யுத்தத்தாலும் இயற்கையினாலும் அழிவடைந்துள்ள வீடுகளையிழந்து தகரங்களின் கீழும் தறப்பாளின் கீழும் வாழும் உறவுகளின் துயரம் எந்தளவு தீர்ந்துள்ளது என்பது உங்களுக்குத் தெரியாத ஒன்றல்ல. மேலும் காணிச் சுவீகரிப்பு.... வலிந்த குடியேற்றங்கள் எனும் பாரியபிரச்சனைக்குக் காரணமானவர்கள் யார்? இவற்றுக்கெல்லாம் விசுவாசமாகத் துணைபோபவர்கள் யார்??

தென்னிலங்கையின் முக்கியத்துவம் மிகக்குறைந்த பகுதிகள் கூட அரசியல் இலாபநோக்கில் அபிவிருத்தி செய்யப்படுவதை சிங்கள அரசியல் தலைவர்களே சுட்டிக்காட்டி ஆட்சியாளரைக் கேலி செய்வதை அறிவீர்கள். அதற்கு நல்ல உதாரணங்களாக பல்லாயிரங் கோடிகளை விழுங்கிய, விமானத்திற்கே எரிபொருள் இல்லாத மத்தள சர்வதேச விமான நிலையமும் கடலடிப்பாறைகளால் கப்பல்கள் வரவிரும்பாத அம்பாந்தோட்டைத் துறைமுகமும் விளங்குவதை அறிந்திருப்பீர்கள். சேதுசமுத்திரத் திட்டம் நடைமுறைக்கு வரும் போது பெரும்பயன் தரவல்ல காங்கேசன்துறைத் துறைமுகமும் திருமலையின் உலகறிந்த துறைமுகமும் சர்வதேச விமானநிலையமாக விருத்தி செய்யத்தக்க கேந்திரத் தானமான பலாலி விமானத்தளமும் பொதுப் பயன்பாடு நோக்கி அபிவிருத்தி செய்யப்படாதது பற்றிய உண்மை நோக்கம் புரிகிறதல்லவா? தேவையும் பயனும் உள்ள எமது பகுதிகள் மீதான அபிவிருத்திப் புறக்கணிப்புதான் இவர்கள் ஓயாமற் கூறும் ஆரோக்கியமான அபிவிருத்தியா?

காங்கேசன்துறை சீமெந்து ஆலை... அச்சுவேலித் தொழிற்பேட்டை... பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை என்பன இருந்து இல்லாமற் போனவை மீளக் கட்டியெழுப்பப்படாமையின் விளக்கந்தான் என்ன? வேலைவாய்ப்பு வங்கி கையுள்ளிருப்பதாகக் கூறி வேலையற்ற பட்டதாரிகள். இளைஞர் யுவதிகளுக்கு வலைவீசுவோர்....அரச கட்டமைப்பில் வெற்றிடமேயில்லாத நிலையிலும் ஏமாற்று வேலை வங்கிகளை உருவாக்குவோர்...பதில் சொல்ல வேண்டியவை. அவர்களே கேள்விக் குறிகளாயுள்ளபோது அவர்களி டம் எதை எதிர்பாரப்பது? தனியார்துறைகளிலும் சுயமாகவும் உழைத்து கௌரவமாக இருந்த இளைஞர் யுவதிகளை எதையும் எதிர்பார்க்கும் மனோநிலைக்குள் வீழ்த்தி முடக்கியவர்கள் யார்? இதன் நோக்கம் என்ன? எப்போதாவது சிந்தித்ததுண்டா?? இப்போது முடிவெடுக்கும் தருணம் கைவந்திருக்கிறது.

மேலும் தமிழர்களாகிய எங்களிடமுள்ள நற்பண்புகளேதுமற்ற அடிதடி சண்டியர்களாக ஒரேகட்சிக்குள்ளேயே பேசித்தீர்த்து சமரசங் காணமுடியாமல் துப்பாக்கி கொண்டு அடாவடிபுரியுமிவர்களா நல்ல சனநாயக ஆட்சியைத் தரப் போகிறார்கள்? இவர்களிடமா காணாமற்போன உறவுகளைத் தேடித் தரும்படி கேட்க முடியும்? இவர்களிடமா செய்த குற்றம் என்னவென்றே அறியாமல் ஆண்டுக் கணக்காக தடுப்புக் காவலில் வாடும் உறவுகளை மீட்டுத் தருமாறு கேட்க முடியும்??

அன்பிற்கினிய உறவுகளே!


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவுள்ள தமிழரசுக் கட்சியினருக்கு நீங்கள் உங்கள் வாக்குகளைத் தவறாமல் அளிக்கவேண்டும் என்கின்ற நோக்கோடு நாம் இங்கே எதையுமே வலிந்தோ மிகைப்படவோ கூறவில்லை. பொய்கூறி எதிரணியினரைக் களங்கப்படுத்தும் நோக்கம் கொஞ்சமுமில்லை. நடைமுறை சார்ந்து, சில உண்மைகளை மட்டுமே முன்வைத்திருக் கிறோம்

எம்மினிய உறவுகளே!

நீங்கள் சிந்திக்கத் தெரிந்தவர்கள். காலங்காலமாகப் பட்ட சொல்லொணாத் துன்பங்களிலிருந்து நல்ல அனுபவத்தைப் பெற்றவர்கள். எனவே மீளமீளச் சிந்தியுங்கள். தெளிவடையுங்கள். தெளிவுபடுத்துங்கள். அதற்கான களமாக வருகின்ற வடமாகாண சபைத் தேர்தலைச் சரியாகப் பயன்படுத்துங்கள்.

என்றென்றும்
உங்களோடிருக்கும்
தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம்.

# சிந்திக்கவேண்டிய தேர்தல் களம் 2013



**- யோகி -**

சமூக மாற்றத்தின் பாதுகாப்பினையும், பெறுப்புக்களினையும் சட்டங்களாலும், சமூக வழிகாட்டல்களாலும் முன் எடுப்பதற்கான முயற்சிகளில் ஒன்றே சனநாயகத் தேர்தல். ஆனாலும் அவை சனநாயமாக நடந்தேறினால் மட்டுமே அவை நம்பகத்தன்மை உடையனவாக அமையும். உண்மையான தலைமைகள் முன்னிறுத்தப்பட்டு, மக்களால் தெரிவுசெய்யப்பட்டால், சனநாயகம், நல்லாட்சி என்பன சமூகத்திற்குக் கிடைக்கும். வழிகாட்ட வேண்டியவர்கள் இவ்விடயத்தில் தவறினால் சமூகம், நாடு என்பன என்னவாகும்?

இதற்கான முக்கிய பங்காளர்கள் யார்? அவர்கள் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் வாக்காளர்களே. வேட்பாளர்கள் பற்றிய முன்பின் வாழ்க்கைமுறைகள், அவர்களின் கொள்கைகள், அவர்கள் நிற்கும் கட்சிகள் அதன் கொள்கைகள், அவர்களின் செயற்பாடுகள் நம்பிக்கை தருவனவாக இருக்க வேண்டும். இவற்றினை வாக்களிப்பவர்கள் கவனிக்க வேண்டியது முக்கியமானது. அவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதும் அவசியமானது.

நல்லாட்சி என்பது மக்களின் தெரிவை மதித்து ஏற்றுக்கொள்ளுதலிலேயே தங்கியுள்ளது. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று பாராது எல்லோரும் மக்களின் விருப்பிற்கு மதிப்பளித்து, மக்களின் வேட்பாளர் தெரிவிற்குச் செவிசாய்த்து ஏற்றுக் கொள்வதேயாகும். இது இந்நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா?

இம்முறை மாகாண சபைக்கான தேர்தலில் மக்கள் முன் யாழ் மாவட்டத்தில் 400 வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளார்கள். இவர்களுள் சமூகப் பொறுப்பிலும், பாதுகாப்பிலும் கருதும்போது அதற்குத் தகுதியுடையோர், அதற்கு முன்நிற்கக் கூடியோர் யாவர்? அத்தகையவர்களின் பின்புலம் என்ன? இவர்கள் சார்ந்த கட்சிகள், குழுக்கள் நிறைவேற்றியுள்ள சமூகப் பொறுப்புக்கள், பாதுகாப்புக்கள் யாவை? என்பதனை மதிப்பிட்டே தெரிவினைத் தீர்மானித்தல் வேண்டும். வேட்பாளர்களின் கட்சித் தாவல்கள், குத்துக் கரணங்கள், சமூகக் கேட்டுக்குத் துணைபோதல் என்பவற்றினையும் கருத்திற் கொள்ளவேண்டும். தேர்தலில் போட்டியிடுவதன் நோக்கம் சமூக நோக்கிலா? அக்கறையிலா? மக்கள் முன்னேற் றத்திற்காகவா? என்றவாறெல்லாம் நோக்குதலும் வேண்டும். மக்களின் வாழ்க்கைக்கு அவசியமான முன்னுதாரணமான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு இவர்கள் தயாராக இருக்கின்றார்களா என்பதனைக் கவனிக்க வேண்டும்.

உண்மையில் தம்மைத்தாமே மதிப்பிட்டுப் பார்த்தால் பல வேட்பாளர்கள் ஒதுங்கிக்கொள்ள நேரி டும். வெளிநாடுகளில் இவ்வாறான குற்றச்சாட்டு முன்வைக்கப்படும் போது விலகிக்கொள்ளும் அரசியல் பண்பு காணப்படுகின்றது. ஆனால் இந்நாட்டில் அது இன்னமும் வளரவில்லை.

தராதரமற்ற வார்த்தைப் பிரயோகங்கள், அடிதடிகள், வன்முறைகள், துப்பாக்கி மிரட்டல்கள் என்றவாறு தேர்தல் கலாசாரம் காணப்படுகிறதே, இவை எமது சமூகத்திற்கு ஆரோக்கியமானவையா? இவற்றுக்குள்ளும் எமது வாக்கு யாருக்கு, எத்தகையவர்களுக்கு என்பதை மக்களே சிந்தித்தல் வேண்டும். நம் ஒவ்வொருவரினது வாக்குக்கும் சமூகம் மற்றும் சந்ததியின் எதிர்காலம் பற்றிய பொறுப்பு உள்ளது என்பதை நாமனைவரும் மறக்காது இருப்போமாக.

# தமிழ் மொழியை சர்வதேசமயப்படுத்துவதில் தனிநாயகம் அடிகளாரின் தனித்துவமான பங்களிப்பு

அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார்

③

சென்ற வாரத் தொடர்ச்சி...

**மேனாட்டு அறிஞர்கள் தமிழைப் பற்றி ஆய்வுகளை மேற்கொள்ளத் தூண்டினார்**

இந்திய மொழிக் குடும்பங்கள் பற்றியும், வரலாறு பற்றியும் அறிந்து ஆராய்ச்சி மேற்கொண்டுமிருந்த மேனாட்டு அறிஞர்கள் திராவிட மொழிக் குடும்பங்கள் பற்றியும் குறிப்பாக தமிழ் பற்றியும் அடிகளார் மூலம் அறியவந்ததால் தமது தூண்டுதல் காரணமாகத் திராவிட மொழிகளைப் பற்றியும் - குறிப்பாகத் தமிழைப் பற்றியும் - ஆய்வுகளை அவர்கள் மேற்கொள்ள வழிவகுத்தார்."

ஒரு காலத்தில் இந்தியப் பண்பாட்டை அறிவதற்கு வடமொழி அறிவிருந்தாற்போதும் என்று மேல்நாட்டார் நினைத்தனர். ஆனால் இன்று திராவிட மொழிகளிற் சிறந்த தமிழ் மொழியை அறியாது இந்தியாவின் அடிப்படைப் பண்பாட்டையும், கலைகளையும் உணரமுடி யாது என்றே, வடமொழியுடன் தென்மொழிகளையும் மேனாட்டு அறிஞர் பயின்றுவருகின்றனர். எங்கு மேல்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் ஆழந்த வடமொழிப் பயிற்சி உண்டோ அங்கு தமிழையும் பயிலத் தொடங்கிவிட் டனர்.

"மாக்ஸ் முல்லர் (Max Mullar) போன்ற அறிஞர்கள் காளிதாசனின் மேகதூது போன்ற வட இந்திய இலக்கியங்களைப் படித்து என்ன அருமையான இலக்கியம் என்று பாராட்டியிருக்கின்றனர். ஆனால் அவர்கள் கொஞ்சம் தென்னகத்திற்கு வந்து நக்கீரர் போன்ற தமிழ் அறிஞர்கள் எழுதிய 'நெடுநல்வாடை' போன்ற தமிழ் இலக்கியப் பனுவல்களைப் படித்துப் பார்த்தால் அப்போது திராவிடர்களின் இலக்கியச் சுரங்கத்தில் அருமை பெருமைகளை உணர்ந்திருப்பார்கள் ஏன அடிகளார் எடுத்துக்காட்டினார்.

**தமிழாராய்ச்சியின் எல்லைகளை விரிவுபடுத்தினார்**

தனிநாயகம் அடிகளார் தமிழாராய்ச்சியின் எல்லைகளை விரிவுபடுத்தினார். தமிழாராய்ச்சி குறுகிய ஓர் எல்லைக்குள் மட்டும் சுழன்றுகொண்டிருந்த நிலையில் அதைப் பரந்து விரிந்த ஒரு துறையாக அடிகளார் மாற்றியமைத்தார். உலகத்தமிழாராய்ச்சி மாநாடுகள் மூலம் அடிகளார் இதைச் சாதித்தார் என பேராசிரியர் சு. வித்தியானந்தன் குறிப்பிடுகின்றார்.

"தமிழ் இலக்கியம் பற்றியும், தமிழ் இலக்கணம் பற்றியும் உள்ள ஆராய்ச்சி மட்டும்தான் தமிழாராய்ச்சி என்ற நிலை மாறி, தமிழ் பேசும் மக்களின் வரலாறு, தமிழ் மக்கள் மனிதவியல், தமிழ் மக்கள் சமயங்கள், தத்துவங்கள், தமிழ்த் தொல்பொருளியல், தமிழ் நாட்டவர் பிற நாட்டவரோடு கொண்ட தொடர்புகள், தமிழர் பண்பாடு, தமிழ்க் கலைகள், தமிழ் மொழியியல் மாற்று பல துறைகளிலும் தமிழாராய்ச்சி விரிந்துசென்றிருக்கின்றது. இதன் விழைவாக தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு, தமிழ் மொழியின் தொன்மை போன்றவற்றில் புதிய வெளிச்சம் பாய்ச்சப்பட்டுள்ளது."

தனிநாயகம் அடிகளார் ஏனைய மொழிகளின் ஆய்வுகளைப் பற்றி அறிந்திருந்தார். அந்த ஆய்வுகள் பன்முகப்பட்டவையாக இருந்ததைக் கண்டார். அந்தவகையில் தமிழாய்வின் எல்லைகளையும் விரிவுபடுத்த அவர் எத்தனித்தமை இயல்பானதே.

**உலகின் பல்கலைக்கழகங்களில் தமிழுக்கு பீடம் அமைக்க உழைத்தார்**

அடிகளாரின் முயற்சியின் பயனாக பல வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழும் கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டத்தில் இடம்பெற்றது. ஒரு காலத்தில் மேலைத்தேய பல்கலைக்கழகங்களில் சமஸ்கிருதம் மற்றும் இந்திய ஆரிய மொழிகளிலேயே ஆய்வுகள் இடம்பெற்று வந்தன. இப்போது நிலமை மாற்றமடைந்துள்ளது. தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழர் வரலாறு, தமிழ்ப் பண்பாடு போன்றவற்றிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

"சமஸ்கிருதம் போன்ற வழக்கில்லாத மொழிகட்கே பீடம் அமைத்து ஆய்வு நடத்திவந்த வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் பலவற்றில் தமிழ் மொழிக்கும் பீடம் அமைத்து போதனை செய்யவும், ஆராய்ச்சிச் சாதனைகளை நடாத்தவும் அடிகளார் வழிவகுத்தார்.

உலகப் பல்கலைக்கழகங்களில் இந்திய இயல் அல்லது இந்தியப் படிப்புக்கள் என்றால் வடமொழியாகிய சமஸ்கிருதத்தையே குறித்தன. தனிநாயக அடிகள் உலகில் உள்ள நாற்பதுக்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களுக்குச் சென்று தமிழின் சிறப்பைக்கூறி உலகப் பல்கலைக்கழகங்களில் திராவிட இயலைப் பாடமாக ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தி வெற்றி கண்டார்.

அடிகளாரின் முயற்சியினால் கடல்கடந்த பல நாடுகளின் பல்கலைக்கழகங்களில் தமிழாய்வுப் பிரிவுகளும், தமிழ்ப் போதனா பீடங்களும் ஏற்படுத்தப்பட்டன. மலேசியா, செனகல், அமெரிக்கா, சோவியத் யூனியன், செக்கோஸ்லவாக்கியா முதலான நாடுகளிலுள்ள உயர் கல்வி நிலையங்களில் தமிழன்னைக்கு இடம் அளிக்கப்பட்டுள்ளது.

**அனைத்துலக ஆராய்ச்சிக்கான ஒரு மொழியாக தமிழை உயர்த்தினார்**

அனைத்துலக ஆராய்ச்சிக்கான ஒரு மொழியாக தமிழை உயர்த்தியவர் தனிநாயகம் அடிகளார் என தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் குலேந்திரன் குறிப்பிடுகின்றார்.

"இந்தியாவிலும் இலங்கையிலும் ஒருசில பகுதிகளில் மட்டுமே பேசப்பட்டுவருவதும் தன் சொந்தப் பகுதிகளிலேயே உதாசீனப்படுத்தப்படுவதும், வெளியுலகுக்கு அதிகமாய் அறியப்படாததுமான ஒரு மொழியை, அனைத்துலக ஆராய்ச்சிக்கும், கருத்தரங்குகட்குமான ஒரு மொழியாக உயர்பீடத்திலேற்றியமையே அவர் தமிழுக்குச் செய்த மிகப்பெரும் பணியாகும்."

பல நாடுகளில் நிகழும் ஆய்வைப் பற்றியும் அங்குள்ள கல்வி முறைகளைப் பற்றியும் நன்கு உணர்ந்துகொண்ட அடிகளார் பிற நாடுகளில் தமிழாய்வு A Reference guide to Tamil Studies என்ற ஒரு கட்டுரைத் தொகுப்பு நூலை உருவாக்கினார். தமிழாய்ச்சியில் ஈடுபட்டுள்ள பிறநாட்டறிஞர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல்.

உலக நாடுகளில் என்னென்ன முறையில் என்னென்ன நோக்கத்தில் தமிழாராய்ச்சிகள் நடக்கின்றன என்பதை நன்கறிந்துகொள்ளவும் முறையாக தமிழாராய்ச்சியை வளர்க்கவும் இந்நூல் உதவியாக இருந்தது. எதையும் விரிந்த அளவில் நெடுநோக்கில் திட்டமிடும் அடிகளார் தமிழாய்வு வளர்ச்சிக்கும் மிக நன்கு திட்டமிட்டுத்தான் இந்த நூலை உருவாக்கினார்.

அரசியல் ரீதியான அதிகாரத்தைச் செலுத்தவும், சமயப் பிரச்சாரத்தை மேற்கொள்ளவும், வர்த்தக நோக்கங்களுக்காகவுமே ஒரு காலத்தில் வெளிநாட்டவர் தமிழைக் கற்றனர். ஆனால் இன்று அவர்கள் தமிழின் உள்ளார்ந்த சிறப்புக்களுக்காகவும், ஆய்வு நோக்கத்திற்காகவும் தமிழைக் கற்கின்றனர். தமிழ் அறிவு இல்லாமல் இந்தியப் பண்பாடு மற்றும் இந்தியக் கலைகளின் அடிப்படைகளை விளங்கிக்கொள்ள முடியாது என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

தமிழியலை சர்வதேச அறிவுத்துறையாக தனிநாயகம் அடிகளார் உயர்த்தினார் என பேராசிரியர் கா.இந்திரபாலா குறிப்பிடுகின்றார்

"தமிழியல் என்னும் துறை உருவாகவும், அதுபற்றிய அறிவு ஆங்கிலம் வழியாகச் சர்வதேச அறிஞர்களை அடையவும் தொண்டாற்றினார். வேறொரு வார்த்தையில் கூறுவதாயின், தமிழியலைச் சர்வதேச அறிவுத்துறையாக உயர்த்தினார். இதற்கு முதன் முறையாக ஆங்கிலத்திலே 'தமிழ் பண்பாடு' (Tamil Culture) பற்றிய சஞ்சிகையைத் தொடக்கி நடத்தினார். பல நாடுகளுக்குச் சென்று தமிழ் பற்றி விரிவுரைகள் நடத்தினார். தமிழாராய்ச்சிக்கென்று உலக நிறுவனம் ஒன்றை அமைத்து சர்வதேச மாநாடுகள் நடைபெற உதவினார். **இத்தகைய தொண்டு பிறரால் ஆற்றப்படவில்லை"**

**ஊடகங்கள் வழியாக தமிழை உலகறியச் செய்தார்**

கல்வி, பண்பாடு தொடர்பான கட்டுரைகளை உலகத்தில் உள்ள பல செய்தித்தாள்களுக்கும் எழுதி இருக்கின்றார். இத்தாலி, அமெரிக்கா, இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, மலேயா போன்ற நாடுகளில் இருந்து வெளிவருகின்ற செய்தித்தாள்களுக்கும் அடிகளார் எழுத்தோவியங்கள் படைத்திருக்கின்றார்.

இலக்கியம் தொடர்பான பொருள்பற்றி அடிகளார் பி.பி.சி., வத்திக்கான் வானொலி, இந்திய வானொலி (All India Radio), சிங்கப்பூர் மலேசிய வானொலிகளில் உரைகள் நிகழ்த்தியிருக்கின்றார். சிங்கப்பூர் மலேசியா தொலைக்காட்சிகளில் அடிகளார் தோன்றியிருக்கின்றார்.

வானொலி தொலைக்காட்சி நேர்காணல்களின்போதும், கூட்டங்களிலும் பாரதியாரின் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே', யாமறிந்த மொழிகளிலே' போன்ற பாடல்களை அடிகளார் இசைத்துக் காட்டியதும் உண்டு. இதன் மூலமாகத் தமிழின் பல்வகைச் செழுமையையும், தம் பயணத்தின்போது அடிகளார் மேனாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தினார். தமிழ்க் கலைகள் பற்றி உரை நிகழ்த்திய அடிகளார் அவற்றைத் திரைப்படங்கள் வாயிலாகவும் விளக்கினார். அதற்காக இரு திரைப்படச் சுருள்களை தம்முடன் எடுத்துச் சென்றார்.

**நிறைவுரை**

தமிழ் ஆய்வை சர்வதேசமயப்படுத்துவதில் பேராசிரியர் வண. தனிநாயகம் அடிகளார் மிகப்பெரிய பங்களிப்பைச் செய்துள்ளார். கத்தோலிக்கக் குருவான அவர் தமிழ்ப்பண்பாட் டில் வெற்றிவாகை சூடியுள்ளார். தமிழ் ஆய்வை சர்வதேச மயப்படுத்தும் அவருடைய வாழ்நாள் பணிக்கு சர்வதேச மதமாகிய கத்தோலிக்க கிறிஸ்தவம் பெரிய அளவில் அவருக்கு உதவியுள்ளது. தனிநாயகம் அடிகளார் தமிழ் அறிஞர் மட்டுமல்ல. அவர் தமிழ்ப்பண்பாட்டின் உலகளாவிய தன்மையை அடையாளப்படுத்தினாலும் கூட. இதை மக்களும் சரியான முறையில் ஏற்றுக்கொண்டார்கள்.

"கீழைநாட்டுத் தமிழ் அறிஞர்களையும், மேலைநாட்டு தமிழ் அறிஞர்களையும் இணைக்கும் பாலமாகப் பணியாற்றும் ஆற்றல்மிக்க ஒரு பேரறிஞரை அடிகளாருக்குப்பின் தமிழ் ஆராய்ச்சியுலகம் பெறவில்லை என்பது வருத்தத்திற்குரியது."

கடந்த ஆயிரம் ஆண்டுகளில் தனிநாயகம் அடிகளாரைப்போல் தமிழ்ப்பணி புரிந்தவர்கள் வேறு எவருமில்லை[2] என்றும், தமிழை உலக வரைபடத்தில் பொறித்தவர் தனிநாயகம் அடிகளார் என்ற பேராயர் குலேந்திரன் அவர்களின் வார்த்தைகளும், இருபதாம் நூற்றாண்டில் இவரைப்போல் உலகளாவிய தமிழ்ப் பணி புரிந்தவர் வேறெவருமில்லை[3] என்ற அமுதன் அடிகளாரின் கூற்றும் மிகைப்படுத்தப்பட்ட வார்த்தைகள் அன்று.

- முற்றும் -

## வாழ்வுணர்வு.

பனையை மூடிப்பரவி கிளைகளை விரித்து
விழுதுகளை நிலத்துள் ஊன்றி
நிற்கிறது ஆல்.
நெரிந்து விழிபிதுங்கி
பாளை விரிக்கவும் காற்றிற் தலை சிலிர்க்கவும்
முடியாமற் தவிக்கிறது
பனை.
வடலியிலும் மூன்றிலையுடனும்
சின்னத்துண்டு தும்பு வேருடனும்
ஒட்டியிருக்கிற ஆலங் கன்று பற்றிய
கவலைப்பட முடியாத
பக்குவப்பட்டிருக்கிறது
மனசு.
நிராகரிக்க மனப்படாத
வேரறுத்துத் தூரவீசாத
வடலியின் வாழ்வு பற்றி
கவலை கொள்ள நேரமற்றலையும்
காற்று.
பனையை விடவும் பயன் மிகவிருப்பதாக
உலகம் சுற்றிப் பக்குவப்பட்ட
பறவைகளால்
முன்மொழியப்படுவது
ஆலங்கன்றுக்கு ஆதரவுதானே.
பறவையின் முடிவை ஏற்கிற பக்குவத்தை
வடலிகள் பெறுகின்ற காலத்துக்காக
ஏங்க முடிகிற அளவுக்கு
வடலிகளுக்கு உணர்த்த முடியாத
சாதனைகள்
காலங்கள் முழுதுக்கும்
பேசப்படும்தானே......

**கை.சரவணன்**

# சுகமாக அழ வேண்டும்

சிறுகதை

**"கஸ்டங்களும் பிரச்சினையளும் நடக்கிற காலத்திலை தான் பிள்ளை வேதனை. காலங்கடந்த பிறகு அதுகளை நினைக்கேக்கை இவ்வளவையும் தாண்டி வந்திருக்கிறம் எண்ட பிரமிப்பும், சந்தோசமும் வரும். ஆனால் சந்தோசங்கள் அப்பிடியில்லை நடந்து முடிஞ்சபிறகு காலங்கடந்து நினைக்கேக்கை நடந்ததெல்லாம் அப்பிடியே தொடர்ந்திருக்கக் கூடாதோ எண்ட ஏக்கமும் கவலையும் தான் மிஞ்சும்."**

**"நீ ஒண்டுக்கும் யோசியாதைபிள்ளை. எங்களுக்கும் விடிவுகாலம் வரும் அப்ப இதையெல்லாம் நினைச்சுப்பார். நான் சொன்னது சரியெண்டு விளங்கும்."**

எதிர்காலம் என்பது என்னவென்றே தெரியாத சூழலில் யாரும் யாருக்கும் ஆறுதல் சொல்ல முடியாத நெருக்கடியான - நெருடலான இந்த வாழ்விலும் 'கதிரண்ணை'யால் மட்டும் எப்படி இவ்வளவு தெளிவாக, தீர்க்கமாக, குழப்பமில்லாமல் சிந்திக்க முடிகின்றது. என்று நினைக்கும் போது பிரமிப்புத்தான் மிஞ்சுகிறது.

**"நான் அவ்வளவாப் படிக்கேலைப்பிள்ளை. நாலு ஊருக்கும் திரிஞ்சு அடிபட்டதாலை மூண்டு பாஷையும் நல்லாப் பேசுவன், அதாலையே நான் மெத்தப் படிச்சதாய் கனபேர் நினைச்சுக்கொண்டிருக்கினம்".**

இவர் ஏதாவது அரச உயர்பதவியில் இருந்திருக்கலாம் என்ற ஊகத்தின் அடிப்படையில் நலன்புரி முகாமில் பக்கத்துக் கூடாரத்தில் இருந்த பெண்மணி ஒருதடவை

**"ஐயா என்ன உத்தியோகம் பார்த்தனீங்கள்"** என்று கேட்டு வைக்க 'கதிரண்ணை' சொன்ன பதில் இது.

எப்போதுமே தெளிவாகவும் கனிவாகவும் பேசுகிற நிதானம், அந்த நிதானம் தந்த பிரமிப்பு, அதனால் ஏற்படக்கூடிய மரியாதை, இந்தத் தகுதிகள் எல்லாம் சேர்ந்து முட்கம்பி மூடிய முகாம் வாழ்விலும் ஒரு சமூகத்தலைவராக "கதிரண்ணை" என்கிற கதிர்காம சேகரத்தை உருவாக்கியிருந்தது

**"அண்ணை உங்கடை குடும்பம் என்ன மாதிரி? ஏதாவது தகவல் கிடைச்சுதோ."**

சுகம் விசாரித்தவரின் தொனி ஏதோ கேட்க வேண்டும் என்பதற்காகக் கேட்டது போலப்பட்டது. அவரிலும் தவறில்லை இங்கு யாரும் யாரையும் நலம் விசாரிக்கக்கூடிய அளவிற்கு தாங்கள் நலமாக இல்லையே.

**"மனிசி கைதடி முகாமில் இருக்கிறாவாம் பிள்ளையள் இரண்டுபேரும் போனதுகள் போனதுதான். அதுகளாய் எங்கை போனது கொண்டு போனவையள். எல்லாம் நல்லாச் செய்தவங்கள், சனமும் நம்பிக்கையோடை தான் இருந்தது. கடைசி நேரத்திலை எல்லாம் அநியாயமாய்ப் போச்சு. தாங்களும் அநியாயமாய்ப் போய், சனத்தையும் அநியாயப்படுத்திப் போட்டாங்கள்"**

"நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ? சொல்லடி சிவசக்தி" என்ற பாரதியின் வேதனையின் ஆழமும், கனதியும் என்னவென்று இப்போது புரிந்தது.

"இருப்பது எல்லாவற்றையும் இழந்து விடுவது மட்டும் துறவல்ல, அவ்வாறு இழந்து விட்டோம் என்ற அந்த நினைப்பையும், அந்த நினைப்பினால் வரக்கூடிய கர்வத்தையும் இழந்து விடுவதுதான் துறவு" என்று எங்கோ படித்தவரிகள் இவரைப் பார்க்கிறபோது அடிக்கடி ஞாபகத்திற்கு வருகிறது. அவை யாருடைய வரிகள் என்பதுதான் ஞாபகத்திற்கு வரவேயில்லை.

"கதிரண்ணை" எனக்கு அறிமுகமான சந்தர்ப்பம் வித்தியாசமானது மட்டுமல்ல, விபரீதமானதும்கூட. அப்போது இவரது ஊர், பெயர் எதுவும் எனக்குத்தெரியாது.

பகுதி, முழுமை என்ற கணக்கை விட்டுப்பார்த்தால் நான்கு மாவட்டத்தில் இருந்த சனங்கள் ஒன்றாகி கடை சியில் நாலு சதுரமைல் பிரதேசத்தில் நெருக்குப்பட்டு நெஞ்சளவு தண்ணீரிலும் காலளவு சேற்றிலும் நந்திக்கடலைக் கடந்து, மக்களை மீட்பதற்காக **"மனிதாபிமான மீட்பு நடவடிக்கை"** செய்தவர்களின் கட்டுப்பாட்டுப் பகுதியை அடைந்த நேரத்தில் எங்கள் கூட்டத்தில் ஒருவராக இருந்தவர்தான் இந்தக் கதிர்காமசேகரம்.

வயது ரீதியாக, பால் ரீதியாக, விசாரணைக்காக குழுக்களாக்கும் முதலாம் கட்ட நடவடிக்கையில் என்னை ஒரு சிப்பாய் விரல் சுட்டி அழைத்தபோதுதான் "கதிர்காமசேகரம்." முதன் முதலாய் பேசினார்.

**"மெயா மகே துவ தமாய், எயா மாத் தெக்க தமய் ஆவா. மெயாட்டத் பொடி புத்தெக் இன்னவா"** என்ற கதிரண்ணை தீவிரமாக உறுத்துப் பார்க்கப்பட்டார்.

**ஏய்! நீங்களுக்கு அப்பா ..?**

என்று அவரைக்காட்டி என்னைப்பார்த்து அவர்கள் கேட்ட கேள்வி, என்னை தனது மகள் என்று சொல்லியிருக்கிறார் என்பதை ஊகிக்க வைத்தது. ஆமென்றும் கொள்ளலாம் இல்லையென்றும் எடுத்துக் கொள்ளலாம் என்ற விதமாகத் தலையை ஆட்டினேன். தொடர்ந்து கதிரண்ணா எனது மூன்று வயதேயான மகன் "ஈழவாசனை"த்தூக்கி வைத்துக் கொண்டு என்னையும் காட்டித் தொடர்ந்து கதைத்துக் கொண்டிருந்தார். மொழி அவ்வளவாக புரியவில்லை. என்றாலும் என்னை மகளாகவும் ஈழவாசனை பேரனாகவும் நிரூபிப்பதற்காக வாழ்வியல் தேற்றங்களை நிறுவிக்காட்டுகிறார் என்று மட்டும் புரிந்தது.

அவரது பேச்சில் இருந்த தெளிவும் நிதானமும் அவர்களை நம்பவைத்திருக்க வேண்டும். என்னை அதிகம் தொந்தரவு செய்யவில்லை. என் வயதையண்டிய பெண்கள் பலர் வேறு இடத்திற்கு குழுக்களாக இடம் மாற்றப்பட நான் முதியவர்கள் பிள்ளைகள் உள்ள பிரிவில் கதிரண்ணையுடன், மன்னிக்கவும் - அப்பாவுடன் நலன்புரிநிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டேன்.

"பிறப்பித்தோன், கற்பித்தோன், மணமுடிப்பித்தோன், அன்னந்தந்தோன், ஆபத்துக்குதவினோன்" ஐவரும் தந்தையர் எனத் "தமிழிலக்கணம்" கூறும் விதியால் என் ஐந்தாவது தந்தையாக கதிரண்ணா மாறிப்போனார்.

எனது கணவர் "தமிழ்மாறன்" போராளியாக இருந்தவர். பொறுப்பான குடும்பத்தலைவராக இருக்கவும் தன்னால் இயன்றவரை முயன்றவர். போர் தீவிரமாகி யாரும் யாரையும் காப்பாற்ற முடியாது என்ற நிலை வந்தபோது என்னையும் பிள்ளையையும் முன்னே போகும்படி அனுப்பி விட்டு பின்தங்கி விட்டார். நந்திக் கடலைக்கடந்து நாங்கள் கரையேறினாலும் எங்கள் வாழ்வுதான் கரையேறாமற் போய்விட்டது. "புனர்வாழ்வு - மறுவாழ்வு என்ற கட்டங்களுக்குள் நுழைய விரும்பாமல்" அவர் வாழ்வு முடிந்து போக, எங்கள் வாழ்வு இருண்டுபோனது. இந்தச் சூழலில் தான் கதிரண்ணையின் சந்திப்பு நிகழ்ந்தது.

நலன்புரிமுகாமில் வாழ்வில் மறக்க முடியாத இன்னொரு சந்திப்பும் நிகழ்ந்தது

ஒரு தடவை புலம்பெயர்ந்த பெரும்பான்மை இனமக் கள் சேகரித்த நிவாரணப் பொருட்களை வழங்குவதற்காக பின்னேரம் நாலு மணியளவில் எல்லோரையும் வரிசையில் வரச்சொன்னார்கள். எல்லோருக்கும் உடுபுடவைப்பொதியும், பிளாஸ்ரிக்வாளிகளும் தந்தார்கள். பொதிகளைப் பிரித்துப் பார்த்த பலருக்கு அதிர்ச்சி. அநேகமாக எல்லாம் பழைய உடுப்புக்கள், அழுக்கான கிழிந்த துணிகளும் சிலரது பாசலில் இருந்தது. வேதனையும் விரக்தியும்தான் மிஞ்சியது. நொந்து போனவர்களை மேலும் நோகடிக்கிறார்கள் என்ற வேதனையைக்கூடப் பகிர்ந்து கொள்ளப் பயமான சூழ்நிலையில் தான்

**"பூனை இளைச்சுப் போச்சண்டா சுண்டெலி கூட என்னத்துக்கோ வாறியோ? வாறியோ? எண்டு கேக்குமாம் அதைப்போலை எங்களைக் கொண்டு வந்து அடைச்சு வைச்சிட்டு பழந்துணி தந்து கேவலப்படுத்துறாங்கள்! இவங்கள் நல்லா இருக்கமாட்டாங்கள்.!"** என்ற இந்த குரலுக்குச் சொந்தக்காரி கமலம் அக்கா சந்திப்பு.

எல்லோரும் வாய்திறக்கத் தயங்குகின்ற நிலை யில் அத்தனை பேரினதும் ஒட்டுமொத்த ஆதங்கத்தின் பிரதிநிதியாய் ஒலித்த இந்த உரிமைக்குரல் எல்லோருக்கும் பிடித்திருந்தது. மௌனமாய் ஆமோதித்து நகர்ந்தார்கள். ஆனால் எவரும் வெளிப்படையாய் ஆதரிக்கவில்லை

**"வலயம்-04 இலையும், ஆனந்தகுமாரசாமியிலையும் இப்பிடித்தான் பழைய உடுப்புகள் குடுத்தவங்களாம்"**

யாரோ ஒருவர் இது எல்லோருக்கும் பொதுவான வேதனைதான் என்று குறிப்பாகச் சொன்னார். ஆனந்தகுமாரசாமி அருணாசலம், இராமநாதன் கதிர்காமர் என்று தமிழ்த்தலைவர்கள் எவ்வளவு கௌரவமாக நினைவு கூரப்படுகிறார்கள் என்பதை நினைக்க மனம் பெருமையால் நிறைந்தது.

மனிதர்கள் எல்லோரும் நல்லவர்கள் தான். ஆனால் யாருக்கு நல்லவர்கள் என்பதுதான் புரியாமல் இருக்கிறது. சிலர் தனக்கு மட்டுமே நல்லவர்களாக இருக்கிறார்கள். சிலர் மட்டுமே எல்லோருக்கும் நல்ல வர்களாக இருக்கிறார்கள், தனக்காகவும் மற்றவர்களுக்காகவும் கவலைப்படுகிறார்கள், குரல் கொடுக்கிறார்கள். சிலர் குரல் கொடுப்பதில்லை செயற்படுகிறார்கள். இதில் கமலம் அக்கா குரல் வகை, கதிரண்ணா செயல் வகை.

அன்றொருநாள் காலை பத்து மணியிருக்கும் ஒவ்வொரு குடும்பமாக அழைக்கப்பட்டு பெயர்ப் பட்டியலுடன் சரிபார்க்கப்பட்டார்கள். சீருடையினரால் ஒவ்வோரு குடும்பத்தவரும் துருவித்துருவி விசாரிக்கப்பட்டார்கள். மேலோட்டமாகப் பார்த்தால் கணக்கெடுப்புப் போலத் தெரிந்தாலும் வேறு தேவைகளும் இருப்பது அவர்கள் கணக்கெடுப்பில் காட்டிய அக்கறையில் தெரிந்தது.

**"தங்கைச்சி வீட்டை விடப்போகினமாம்பிள்ளை, வன்னிக்குப் போகப்போறன் எண்டு சொன்னால் இப்போதைக்கு அங்கை விடமாட்டினம். யாழ்ப்பாணம் போற ஆக்களைத் தான் முதல் விடப்போகினம் போலை கிடக்கு, எங்களுக்கு தீவிலை காணி இருக்கு, இவற்றை ஆக்களும் அங்கை இருக்கினம், நான் அங்கத்தை விலாசந் தான் குடுத்துப் பதிஞ்சனான், நீயும் யாழ்ப்பாணம் போக வசதியெண்டால் அங்கை ஆரும் தெரிஞ்சவை இருந்தால், அங்கை போகப்போறன் எண்டு பதிஞ்சு கொள்ளு. இந்த நரகத்துக்காலை வெளிக்கிட்டாக்காணும்"**

- வரணியூரான் (ஜுனியர்) -

என்ற கமலம் அக்காவின் யோசனைதான் என்னையும் யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேற வழிசெய்தது.

பதிவின்போது குடும்ப விபரங்கள் பற்றி துருவித்துருவிக் கேள்விகள் கேட்டார்கள். அப்பாவின் பதிலில் திருப்தியடையாதவர்களாய்

**"அக்கா! நீங்களுக்கு அண்ணா எங்க?"**

என்றார்கள். என்னால் பதில் சொல்ல முடியவில்லை, முடியவில்லை என்பதை விட சரியான பதில் தெரியவில்லை. கண்ணீரை மட்டும் கட்டுப்படுத்த முடியவில்லை

**'செத்த போச்சு"**

என்ற கேள்விக்கு ஆமென்று தலையசைத்தேன்

**"சரி, சரி, நீங்களுக்கு வீடு போறது. அது தாங் பதிஞ்சு"**

என்ற பதிலில் ஒரு விடியலின் அறிகுறி மெல்லத் தெரிந்தது.

தீவகத்தைச் சேர்ந்தவர்கள் முதற்கட்டமாக நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட போது கமலம் அக்கா குடும்பம் சென்றுவிட, தனிமையும் வெறுமையும் மனதில் எஞ்சியது. வெளியே போனால் கதிரண்ணையும் தன் குடும்பத்தைத் தேடிப்போய்விடுவார். அதற்குப் பிறகு எதிர்காலம் என்ன? என்ற கேள்வி வெறுமையாக எஞ்சி நிற்க இதற்குமேல் யோசிப்பதற்கே அயற்சியாக இருந்தது.

காலம் எமக்காக காத்திருக்காமல் தன்பாட்டில் நகர்ந்தது. முகாமில் பதிவு களுக்குப் பொறுப்பாக இருந்த கச்சேரி உத்தியோகத்தர்

**"யாழ்ப்பாணத்திலை மீளக் குடியேற்றத்திற்குப் பதிஞ்ச ஆக்கள் நாளைக்குப் பயணத்துக்கு தயாராக இருங்கோ"**

என்ற தகவலை வழங்க, முகாம் பரபரப்பானது. நானும், மகனும், கதிரண்ணையும் இரவு உறங்கவில்லை என்பதை விட உறக்கம் வரவில்லை. முகாம் வாழ்விலிருந்து விடுதலை என்ற மகிழ்ச்சியா? ஆளுக்கொரு திக்காகப் பிரிகிறோம் என்ற பிரிவுத்துயரோ? தெரியவில்லை. நிரந்தர உறவுகளின் பிரிவால் எழுந்த சோகம் மெல்ல தணிந்திருக்க காலநிர்ப்பந்தம் தந்த உறவின் பிரிவும் சேர்ந்து பழைய நினைவுகள் மனதைப்பிழிந்தது.

**"எங்களை எல்லாம் யாழ்ப்பாணம் துரையப்பா ஸ்ரேடியத்திலை வைச்சு அமைச்சர் சொந்தக்காரரிட்டைக் கையளிக்கப் போறாராம்"** என்று பேசிக்கொண்டார்கள். 'கதிரண்ணை' அதிகமாக மௌனமாகவே நாளைக்கழித்தார்.

**"என்னப்பா கதைபேச்சில்லாமல் இருக்கிறியள்"**

**"இல்லைப்பிள்ளை சொந்தப் பிள்ளையளைத்துலைச்சுப் போட்டன். இப நீங்களும் நாளையோடை போயிடுவியள், உன்னைப் பற்றிப் பெரிசா யோசினையில்லை இவனை விட்டுட்டு இருக்கிறதுதான் ஏலுமோ தெரியேல்லை"**

முகாம் மின்சாரவிளக்கு வெளிச்சம் தறப்பாள் கூடாரத்திற்குள் மங்கலாகத் தெரிந்தாலும் அந்த வெளிச்சத்திலும் கதிரண்ணையின் கண்களில் பளபளப்பையும் கண்ணீரையும் உணரமுடிந்தது. ஏனோ துக்கத்தில் தொண்டை அடைத்தது. அழுவதற்கு அவகாசமில்லாத நேரத்து இழப்புக்களுக்கும் சேர்த்து இப்போது அழவேண்டும் போலிருந்தது. நீண்ட நாட்களுக்குப்பின்னர் மனம் விட்டு சுதந்திரமாக அழுகை வந்தது. இந்த அடிமை வாழ்வின் இறுதிக்கண்ணீர் என்பதாலோ தெரியவில்லை.

**"இல்லையப்பா யாழ்ப்பாணம் தானே போறம், கட்டாயம் திருப்பிச் சந்திப்பம். உங்கடை பிள்ளையளும் எங்கையாவது இருப்பினம். பிடிபட்ட கனபேர் வெலிக்கந்தை மாதிரியான இடங்களிலை இருக்கினமாம், அப்பிடி எங்கையும் இருப்பினம்."**

ஏதோ பேசவேண்டும் என்பதற்காக அல்ல மனப்பூர்வமாகவே அப்படி ஒரு நம்பிக்கை அடிமனதில் இருந்தது.

**"நானும் பிள்ளையும் வந்து வந்து உங்களைப் பாப்பமப்பா"** என்று சொன்னபோது கதிரண்ணை ஈழவாசனை அள்ளி அணைத்துக்கொண்டு விக்கிவிக்கி அழுதார்.

**"பிள்ளை இனி எப்ப சந்திக்கிறமோ? நீ ஒண்டுக்கும் கவலைப்படாமல் போ. நானும் யாழ்ப்பாணத்திலை தான் இருக்கப்போறன். கைதடி போய் மனிசியைப்பார்க்க வேணும். நான் எங்கை இருக்கப்போறன் எண்டு தீர்மானிக்கயில்லை, இப்ப மருமகன் வீட்டைதான் போகப்போறன், வெளியிலை போனால்தான் பிள்ளையளைப்பற்றியும் முடிவு தெரியும்"**

அவரிடம் சுன்னாகத்தில் இருக்கும் அக்காவின் முகவரியைக் கொடுத்திருந்தேன்.

**"சுன்னாகத்திலை நீ சொன்ன அக்கா வீட்டை தானே பிள்ளை போறாய், வந்து பாக்கிறன், நான் அழுது உன்னையும் கவலைப்படுத்திப்போட்டன்."** என்று மறுநாள் விடை பெற்றுக் கொண்டார்.

இதெல்லாம் நடந்து ஏறத்தாழ ஒருவருடம் கடந்து இப்போது நடந்ததெல்லாம் நினைக்க 'கதிரண்ணை' சொன்ன வரிகள் தான் ஞாபகம் வருகிறது. கொழும்பு பயணத்துக்கு முன்னம் கதிரண்ணா குடும்பத்தையும் கமலம் அக்காவையும் பார்க்க வேணும் என்று ஆவலாக இருந்தது.

கமலம் அக்காவின் வீடு தேடிப்பிடிப்பதில் சிரமம் ஒன்றும் இருக்கவில்லை. முகாமிலிருந்து புறப்படும்போது சொன்ன

**"நீ அங்கை வந்து சூசையப்பர் கோயிலடி எண்டால் ஆரும் காட்டுவினம் இவற்றை தேப்பன்ரை பேர் இராசையாளு இராசையா வீடு எண்டால் தெரியாத ஆக்கள் இருக்காது"**

என்ற அடையாளம் சரியாக இருந்தது. பஸ்ஸிலிருந்து இறங்கி ஒரு பெரியவரைக்கேட்டபோது

**"நான் அவையின்ரை வீட்டுப்பக்கம்தான் போறன் என்னோடை வா தங்கைச்சி"** என்று சைக்கிளை உருட்டிக்கொண்டு என்னுடன் நடந்தவர், சிறிது தூரத்தில் ஒரு வீட்டின் முன் சைக்கிளை நிறுத்தி

**"பரமு உங்களைத்தேடி ஆரோ ஒரு பொம்பிளைப் பிள்ளை வந்திருக்கடா"** என உரத்துக் குரல்கொடுத்தார்

வசதியான வீடு, வீட்டோடு சேர்ந்த காணியில் புகையிலை பயிரிடப்பட்டிருந்தது. கமலம் அக்காவின் கணவர் பரமசாமி அண்ணா புகையிலைச் செடிகளுக்கிடையே ஏதோ வேலையாக நின்றவர், பார்த்தவுடன் அடையாளம் கண்டுகொண்டார்.

**"எடி பிள்ளை நீயே வா! வா! என்னெண்டு இடம் தேடிப்பிடிச்சனி, உள்ளை வாவன் கமலம் இஞ்சை கொஞ்சம் வெளியிலையும் எட்டிப்பாரப்பா, என்ரை மனிசிக்கு காது கேட்கிறதும் குறைவு"**

அவரின் உற்சாகம் புதுமையாக இருந்தது. முகாமில் இருந்த பரமசாமி வேறு இவர் வேறு என்பதாகப்பட்டது.

**"எப்பிடியண்ணை இருக்கிறியள் அக்கா எப்பிடியிருக்கிறா"**

என்ற எங்கள் சம்பிரதாய உரையாடலுக்கிடையில் எனக்கு வீடு காட்டியவர் காணாமல் போனதை அவதானிக்கவில்லை. சம்பிரதாய மான உரையாடல்கள், அவர்களின் உள்ளூர் உறவுகளுக்கான அறிமுகம் முடிந்து.

**"இப்ப என்னபிள்ளை செய்யிறாய்? எங்கையிருக் கிறாய்?"**

என்ற விசாரிப்புத்தொடர்ந்தது.

விடுதலை வாங்கித்தருவதற்காய் போராடியவர்களுக்கு இப்போது ஒருவேளை உணவுக்காய் போராடுவது எவ்வளவு கடினமாக இருக்கிறது என்பதை வார்த்தைகளால் விபரிக்க என்னால் முடியவில்லை. சொந்தச் சமூகமும் உறவுகளும் அன்னியமாகப் பார்க்கின்ற வேதனை கண்ணீராய் வெளிப்பட்டது.

**"சரி பிள்ளை அழாதை, எல்லாருக்கும் பயம்தான். உனக்கு மட்டும் பிரச்சினையில்லை நாளைக்கு தங்களுக்கும் ஏதும் பிரச்சினை வருமோ எண்டு பயப்பிடுகிறதை நாங்கள் குறை சொல்லேலாது. எல்லாரும் ஒரேமாதிரி இருக்க மாட்டி னம்தானே. சரி அதைவிடு! ஏன் பிள்ளையைக்கூட்டிக் கொண்டு வரயில்லை"**

கடைசிக்கேள்வி இதுவரை அடக்கி வைத்திருந்த அத்தனை வேதனைகளையும் கிளறிவிட என்னால் அழுவதைக்கட்டுப்படுத்த முடியவில்லை.

**"பத்துமாதம் வயிற்றிலை சுமந்து, இரண்டு வயது வரை மடியிலை சுமந்து, நந்திக்கடலிலை தோளிலை சுமந்து, பாதுகாத்த பிள்ளை என்ரையில்லையாம், தகப்பன்ரை ஆக்கள் வந்து பறிச்சுக்கொண்டு போயிட்டினம்"**

என்று சொன்னபோது கமலம் அக்காவிடம் நான் எதிர்பார்த்த அதிர்வு எதுவுமில்லை,

**"அதுகும் நல்லதுதான் தங்கைச்சி, நீ உன்னைப் பாக்கக்காணேல்லை. மகனையும் வச்சிருந்து என்ன செய்வாய்? எங்கையெண்டாலும் பிள்ளை வளரட்டன். ஒரு காலம் பிள்ளை அம்மாவைத்தேடும் தானே? அப்ப வரட்டன். அதுசரி அவையள் ஏன் உன்னைக் கூப்பிடயில்லை? பிள்ளை யை மட்டும் கேக்கினம்?**

'சிங்களவர் பழைய உடுப்புக்கொடுக்கிறார்கள்' என்பதற்காக குரல் கொடுத்த அந்த பழைய 'கமலம் அக்கா' இந்தக்கேள்வியைக் கேட்டிருந்தால் யாழ்ப்பாணத்தில் முப்பது வருடம் உறங்கிய சாதியப் பேயும் சமூக அடுக்குகளும் மீண்டும் துளிர்ப்பதை விபரித்திருக்கலாம் இப்போது தேவையில்லை என்று பட்டது .

**"அவைக்கு விருப்பமில்லையாக்கும்"** என்ற பதிலோடு நிறுத்திக்கொண்டேன்

**"சரியக்கா நான் வெளிக்கிடப்போறன் இன்னொரு நாள் ஆறுதலாய் வாறன்"**

என்று விடைபெற முயன்றேன்

**"ஓமடா குஞ்சு போட்டு வாவன். இண்டைக்கு நீ வந்தது நல்ல நேரம். நாங்கள் நிக்கிறது குறைவு. வாறதெண் டால் போன்பண்ணிப்போட்டு வாடாம்மா"**

**"தம்பி அந்த ரெலிபோன் நம்பரை ஒரு பேப்பரிலை எழுதி அக்காட்டைக்குடு"**

**"இல்லாட்டில் பொறு நான் வாறன்"**

என்று தொலை பேசி இலக்கத்தை தானே ஒரு கடதாசியில் எழுதித்தந்தார். புறப்படும் போது இங்கு வந்திருக்க வேண்டாமோ என்ற அயர்ச்சி தோன்றியது.

யாழ்பாணம் பஸ்நிலையத்தில் சுன்னாகம் பஸ்ஸிற்காக காத்திருக்க வேண்டியதாயிற்று

**"இனி மூண்டுமணிக்குத்தான் பஸ்"**

என்று நேரக்காப்பாளர் சொன்ன போது நேரம் 2.45 இன்னும் பதினைந்து நிமிடம் காத்திருப்பது தவிர வேறு மார்க்கமிருக்க வில்லை.

**"கமலம் அக்கா எழுதித்தந்த ரெலிபோன் நம்பரை போனிலை பதிஞ்சு வைப்பம்"**

என நினைத்து பதிந்த பின்தான் எனது ரெலிபோன் நம்பரைக் கொடுத்திருக்கலாம் என்ற நினைப்பு வந்தது

**"ஒருக்கால் அவையின்ரை நம்பருக்கு எடுத்து என்ர நம்பரைக் குடுப்பம்"** என நினைத்து அழைத்த போது எதிர் முனையில்

**"மெம அங்கய பாவித்தாவே நொமத்த"**

என இனிமையான குரல் பெண்ணொருத்தி ஒவ்வொரு தடவையும் தொடர்ந்து பேசினாள். இந்த வசனத்தைப் பலதடவை கேட்டு மனப்பாடம் செய்து கொண்டிருந்தபோது ஆதரவாக தோளில் ஒரு கை படிவதை உணரமுடிந்தது. "கதிரண்ணை"

**"ஐயோ! அப்பா எப்பிடியிருக்கிறியள்? ஏன் வாறனெண்டு வரயில்லை? பிள்ளையள் என்னமாதிரி? அம்மா என்னமாதிரி?**

என்னுடைய தொடர் கேள்விக்கு ஒரே பதிலாக

**"எல்லாரும் இருக்கினம்"** என்றார்

**"பிள்ளையள் இரண்டுபேரும் இருக்கினமோ? ஏன் அப்பா ஒரு மாதிரி இருக்கிறியள்.?**

**"இருக்கினம், இப்ப பொங்கலுக்குத்தான் விட்டவங்கள் நான் அவையோடை இல்லை, சகோதரியோடை இருக்கிறன்"**

**"ஏனப்பா அவை உங்களோடை இல்லை? ஏதும் பிரச்சினையே?**

**"பிள்ளை என்ன அப்பா, அப்பா எண்டு கூப்பிடா தை. கதிரண்ணையெண்டு சொல்லு காணும். நீ எப்பிடி யிருக்கிறாய்"**

**"இருக்கிறன் கதிரண்ணை பெரிசாய் பிரச்சினை ஒண் டும் இல்லை"**

**நீங்களும் நாளையோடை போயிடுவியள் உன்னைப் பற்றிப் பெரிசா யோசினையில்லை இவனை விட்டுட்டு இருக் கிறதுதான் ஏனுமோ தெரியேல்லை"**

என்ற பேரப்பிள்ளையைப் பற்றி அவர் எதுவும் கேட்க வில்லை

**"சரி கதிரண்ணை பஸ்ஸ்"க்கு நேரமாகுது நான் வாறன்"**

என்று புறப்பட்டேன்.

எனது சொந்த அக்காவே

**"நீ இஞ்சை இருக்கிறது அத்தானுக்குப் பிரச்சினை நெடுக சுன்னாகம் ஆமி உன்னைப்பற்றி அவரிட்டை விசாரி க்கிறானாம்"**

என்ற போது முன்பின் தெரியாத, என்னை ஆபத்தில் மகள் என்று உரிமை பாராட்டிய கதிரண்ணை மனதில் வானளாவ உயர்ந்து நின்றார் . இந்தச் நடிப்பு நிகழாவிட்டால் அந்த பிம்பம் அப்படியே இருந்திருக்கும். தனிமரமாய் போய்விட்ட என்னிலையைக் "கதிரண்ணை"யிடம் சொல்லி ஆறுதல் கேட்க நினைத்திருந்த என்னைப்பார்க்க எனக்கே பரிதாபமாக இருந்தது.

**"ஆடைத்தொழிற்சாலைக்கு ஆட்களை எடுக்கினமாம் நல்ல சம்பளமாம் எண்டு சொல்லுகினம். ஆனால் வேறை விதமாய் சிங்கள ஆக்கள் பொம்பிளைப்பிள்ளையளுக்கு பிரச்சி னை குடுக்கிறாங்கள் எண்டும் கதை . சரி இதுவரை பாக்காத பிரச்சினையே. போயப்பாப்பம்."** என்று முடிவு பண்ணி அந்தப் பயணத்துக்கு முன்னம் கதிரண்ணை குடும்பத்தையும், கமலம் அக்காவையும்பார்க்க வேணும் என்[illegible]20. இப்படி நிறைவேறியிருக்கிறது.

எனது பிரச்சினை இது, அத்தானின் பிரச்சினை வேறு

**"அக்காவைச்சந்திக்காமல் முதல் உம்மைச் சந்திச் சிருந்தால் ஆர் எதிர்த்தாலும் உம்மைத்தான் கட்டியிருப்பன்"**

என்று அக்கா இல்லாத நேரத்தில் பகிடி என்ற போர்வையில் பல்லிளிப்பது படு அபத்தமாக இருக்கும். இதற்கு நான் எந்தப்பிரதிபலிப் பும் காட்டுவதில்லை. அதனாலோ என்னவோ தெரியாது அண்மைக்காலமாக நான் வீதியால் போக வர பார்த்துக்கொண்டிருக்கும் சுன்னாகம் ஆமி என்னிடம் எதுவும் கேட்காமல் அவரிடம் என்னைப்பற்றி விசாரிக்கிறானாம், பாவம் அத்தான்.

**"சுன்னாகம் மாசியப்பிட்டி அளவெட்டி போறாக்கள் வாங்கோ"**

என்ற மினிபஸ் கொண்டக்டரின் சத்தம் என்னை சுயநினைவுக்கு கொண்டு வர பஸ்ஸில் ஏறி அமர்ந்தேன்.

**"அக்கா! அந்த ஐயாவை என்னண்டு தெரியும்?**

மினிபஸ் கொண்டக்டரின் கேள்வி 'கதிரண்ணையை' ப்பற்றியது என்பது விளங்கினாலும் பதிலளிக்கும் மனநிலையில் நான் இல்லை

**"எனக்குத்தெரியாது"** என்று பேச்சைத் துண்டித்தேன்

**"நான் நினைச்சன் உங்களுக்குத்தெரிஞ்ச ஆளாக்கு மெண்டு ஆள் சரியான வில்லங்கப் பேர்வழி. அவதானமா யிருக்கோணும், பதின்மூண்டு வயதுப்பிள்ளையோடை பிரச்சினையெண்டு பொலிஸ் பிடிச்சு வைச்சிருந்தது. இப்ப கிட்டடியிலைதான் வெளியிலை வந்தவர். வீட்டுக்காரர் கலைச்சு விட்டிட்டுதுகள், இப்ப ஆரோ ஒரு பொம்பிளையோடை உரும்பிராயிலை இருக்கிறார்."**

நான் எதுவும் கேட்காமலே மினிபஸ் பொடியன் சொல்லிக் கொண்டிருந்தான். எனக்கு மெதுவாகத்தலை சுற்ற ஆரம்பித்தது.

மினிபஸ்ஸில் உள்ள சீடி பிளேயரில் பி.சுசீலா பாடிக்கொண்டிருந்தார்

**"நான் உறங்கும் நாள் வேண்டும்**
**சாய்ந்து கொள்ள தோள் வேண்டும்**
**என்கண்ணில் நீர் வேண்டும்**
**சுகமாக அழ வேண்டும்"**

-த.ஜெயசீலன் -

# தொடர் கோடை



என்ன வெய்யில்? எவர்தான் ஏன்? சூரியனில்
எண்ணையை விட்டு
இப்படித் தீ மூட்டுகிறார்?
பச்சை இலைபொசுங்கிச் சருகாகிப் போகுதையோ!
மிச்சமான தலைமுடியும்
கருகும்வாசம் அடிக்குதிப்போ!
பாவம் பறவைகளின் சிறகெல்லாம் புகையுதையோ!
தீமிதிப்பா அட்ட திசையினிலும்?
கால்வைத்து
நேர்த்திதீர்த்த பக்தரானோம்
என்னவரம் பெறப்போறோம்?
முகில்கள் தீப்பிடித்து முளாசிப் பொசுங்கியதால்
மிஞ்சிற்று வெளிர்நீல வானம்.
அனல்பறக்க
பஞ்சி படர்ந்திருக்கும் தெருவில் நடமாட்டம்
ஏதுமில்லைஎனு
கானலுக்கு ஏமாற நாதியில்லை!
இக்காங்கை போக்கக் குளிக்கஇங்கு
கங்கையில்லை.
சின்னக் குளம் குட்டை
வாய்க்கால்கள் ஏதுமில்லை
இந்தத் தகிப்பைத் தணிக்கஇதமாக்க
மந்தகாசத் தென்றலேனும் வாராதா
எனக்கேட்டேன்.
காற்றினது ஈனசுரம்
அதையும் வெய்யோனின்
ஆட்கள் சிறைப்பிடித்த சேதிசொல்லிப் போயிற்றாம்!

# சொல்...

ஒளிகுறைந்த கண்ணினாய் ஆனாயே!
உறுதி கொண்ட தோள்நொடிந்து போனாயே!
களிபடைத்த மொழிமறைந்து வீழ்ந்தாயே!
கலக்கமுறும் நெஞ்சினோடு வாழ்ந்தாயே!
தெளிவுபெற்ற மதியிழந்து தோற்றாயே!
சிறுமைகொண்டு தலைகுனிந்து தாழ்ந்தாயே!
எளிமைகண் டிரங்கிடாது சாய்ந்தாயே!
இருப்பவன் பின் சென்றிறுந்து தேய்ந்தாயே!

வழிமறந்து போனதேனோ உன்கால்கள்?
வடிவுலர்ந்து போனதேனோ உன்மேனி?
பழிசுமந்து தேய்ந்ததோ கொல்உன்கைகள்?
பருவம் மீறிப் பாய்கிறதா..உன்காமம்?
உளிநிகர்க்க வேண்டுமடா உன்வார்த்தை.
உருச்சிதைந்து போனதேனோ உன்வாழ்க்கை?
விழி திறந்து பாரடாநின்முன் ஈனம்
விதியை மாற்றிடாது யார்க்குக் கண்தானம்?

தருமமொன்று உள்ளதை நினைக்காய் நீ.
தவிசழிந்து போனதை மறந்தாய் நீ.
மருமம் சூழும் போதும்தட்டிக் கேளாய் நீ
மனது போன வழியில் மட்டும் போறாய் நீ.
கருமம் நூறு காத்திருக்கச் செய்யாய் நீ
கடவுளுக்கும் கடவுளென்றும் சொல்வாய் நீ.
வரங்கள் வாங்கத் தவங்கள் செய்திடாயாம் நீ
வலுவிழுந்துன் வசமிழக்க லாமோ நீ?

# திறனில்லார் திறமில்லார்

## அறிவுக்கு சமாந்தரமாக திறன்களின் அவசியம் குறித்து ஆராயும் கட்டுரை

**அறிமுகம்:**

**"ஓடி விளையாடு பாப்பா – நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா ஓடிவிளையாடு பாப்பா... எனவும்**
**காலை எழுந்தவுடன் படிப்பு, பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு மாலை முழுதும் விளையாட்டு என்று வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா"**

எனவும் குழந்தைகளுக்காக பாப்பாப் பாட்டுப் பாடிய பாரதியாரை இந்த இடத்திலே எண்ணிப் பார்க்கிறேன். ஒரு குழந்தையினுடைய வளர்ச்சிக்காக அவர் வகுத்துக் கொடுத்த விதிகளையும் நேர அட்டவணைகளையும் காணும் போது அதில் பொதிந்து கிடக்கும் உளவியல் உண்மைத் தன்மைகளை ஆழமாக உணர்ந்து முடிகிறது.

எமது சமூகத்தில் வாழும் சிறுவர்களுக்கு இவ்வாறான விதிப்படி வாழ வழி கிடைக்கின்றதா என ஆய்வு செய்ய விழையும் போது ஏமாற்றமான பதிலே கிடைக்கின்றது. இன்றைய உலகத்தின் போக்கு நின்று, நிதானித்துச் சரியாக அனுமானித்துச் செல்ல முடியாத நிலையில் நாளுக்கு நாள் புதிய ரூபங்களைக் கொள்ளும் மாற்றுருத் தன்மை கொண்டதாகவே காணப்படுகின்றது. இயந்திர மயமாக மாறிவரும் வாழ்க்கை புதிய நுட்பங்களின் புகுத்தலினால் புனிதத்தைத் தொலைத்து வரும் பண்பாட்டு கலாச்சார வாழ்வியல் மரபுகள் என எமது நாளாந்தப் பொழுதுகள் நாம் எண்ணித் தீர்மானிக்க முடியாத திசை நோக்கிய பயணமாகவே அமைகின்றன.

உலக மயமாக்கலின் விளைவுகள் இன்று எமது உலை வரை வந்து தொலைத்து விட்டது. தகவல் தொழில்நுட்பத் துறையின் முன்னேற்றம் உலகத்தை உள்ளங்கையில் கிராமமாகச் சுருக்கித் தந்திருக்கின்றது. இவை அனைத்தினதும் அடிப்படையில் **வாழ்க்கை இலகுவாக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் வாழுதல் என்பது கடினமாக்கப்பட்டிருக்கிறது.** இதுவே உண்மை. இந்த யதார்த்தத்தை புரியாமலேயே எமது நாட்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய இடர்மிகு வாழ்வை இன்பமயமானதாக்கவும் வாழுதலில் ஓர் அர்த்தத்தை உருவாக்கவும் நாம் நமது சிறார்களை தயார்ப்படுத்திக் கொள்வதோடு அவர்களுக்கு அதற்கான பாதைகளையும் திறந்து விட வேண்டியிருக்கிறது.

**அறிவு சார் பொருளாதார கட்டமைப்பு**

போட்டித் தன்மை மிக்க உலகில் எமது நிலைத்திருப்பை நிலையானதாகவும், நீடித்ததாகவும் மாற்றிக் கொள்வதிலேயே இன்று போட்டி நிலவுகின்றது. அதற்காகத் தம்மை தயார்ப்படுத்திக் கொள்ள விழைவோரும் அதன் விளைவான சவால்களை எதிர்கொள் ளத் துணிவோரும் அதற்காக கையில் ஏந்தி யிருக்கும் ஆயுதமே அறிவு.

ஏனெனில் காலத்திற்குக் காலம் உலகின் பொருளாதாரத்தைத் தாங்கும் நிலைகளாக கைத்தொழில் மயமாக்கல் விவசாயப் பொருளாதாரப் பசுமைப்புரட்சி என்று மாற்றம் பெற்று இன்று அறிவுசார் பொருளாதாரக் கட்டமைப்பிலே நாம் வந்து நிற்கிறோம். தற்போதைய உலகின் பொருளாதார சமமின்மையையும் தளம்பலையும் நிவர்த்தி செய்ய வல்ல உத்தியாகவும் வழியாகவும் அறிவே (knowledge) திகழ்கின்றது.

இருந்தும் இத்தகைய அறிவு என்பது எப்படி பயனுறுதி மிக்கதாகவும் அறிவின் விளைவுகள் எவ்வாறு வினைத்திறன் மற்றும் விளைதிறன் மிக்கனவாகவும் உள்ளனவோ அதனடிப்படையிலேதான் அறிவும் ஆளும் காரணியாகத் திகழ முடியும். எனவே அறிவை வளமாக்க அதனை மேலும் பெறுமதித்தன்மை மிக்கதாக்க திறன்கள் (Skills) அதனோடு இணைய வேண்டியது மிக மிக அவசியமானவை.



**திறன்களின் அவசியம்**

இவ்விடயத்தை இலகுவாக விளங்க வைப்பதாக இருந்தால் கீழ் வரும் உதாரணத்தை கூறுவது பொருத்தமானதாக இருக்கும். அதாவது

**நீச்சல் போட்டி எழுத்துப் பரீட்சையிலே ஒருவர் முதலிடம் பெறும்போது தான் நீச்சல் துறையில் முழுமையான அறிவு பெற்று விட்டதாக கருதுவது**

நீந்துவது எப்படி என்று புத்தகத்தை வாசித்து அறிந்து கொள்ளும் ஒருவரால் ஒருபோதும் ஒழுங்காக நீந்த முடியாது. புத்தகத்தை வாசித்து விட்டு தண்ணீரிலே குதித்தால் அவரது முழு வாழ்வுமே காலியாகி விடும். நீந்துவது தொடர்பாக முழுமையான அறிவு அவரிடம் இருந்தாலும் அது தொடர்பான திறன் அவரிடம் இல்லாதபோது அது தொடர்பில் எந்தவிதமான பிரயோசனமும் கிடையாது. தண்ணீரிலே மெதுவாக இறங்கி கைகளையும், கால்களையும் அடித்து நீந்தக் கற்றுக்கொள்ளும் ஒருவரினாலேயே நீந்த முடிகிறது. அவர் தண்ணீருக்குள் இறங்கிய தன் விளைவாகவே நீந்த முடிவதுடன் நீச்சல் தொடர்பான அறிவினையும் பெற முடிகிறது.

இந்த உதாரணத்தின் மூலமாக திறன்களின் அவசியம் குறித்து இலகுவாகப் புரிந்து கொள்ள முடிந்திருக்கும்.

**தேவைப்படும் அவசிய திறன்கள்**

மனிதர்க்குத் தேவையான திறன்களைப் பட்டியலிட விழையும் போது அது பல பக்கங்களாக நீண்டு செல்லும். ஒவ்வொரு மனிதரிடமும் ஒவ்வொருவிதமான திறன்கள் பொதிந்து கிடக்கின்றன. பலரது திறன்கள் அவர்களுக்கே தெரியாமல் ஒழிந்திருக்கின்றன. நாம் இவ்விடத்தில் இன்றைய போட்டித் தன்மையான உலகையும் வேலை வாய்ப்புச் சந்தையையும் எதிர்கொள்ள எமது மாணவர்களிடத்தே வேண்டப்படும் திறன்கள் சிலவற்றைக் கவனிப்போம்.

1) தொடர்பாடல் திறன்
2) முகாமைத்துவத் திறன்
3) தலைமைத்துவத் திறன்
4) ஆளுமைத் திறன்
5) தகவல் தொழில்நுட்பத் திறன்
6) சவாலை எதிர்கொள்ளும் திறன்
7) இடரினைத் தாங்கும் திறன்
8) சமயோசித தந்திரோபாயத் திட்டமிடல் திறன்
9) முரண்பாட்டு முகாமைத்துவத் திறன்
10) புதிது புனையும் திறன்
11) நகைச்சுவைத் திறன்
12) ஆராயும் திறன்
13) செவிமடுக்கும் திறன்
14) தீர்மானம் எடுக்கும் திறன்
15) அமுலாக்கும் திறன்
16) சமூகமயமாகும் திறன்

மேற்குறித்த திறன்கள் உள்ள ஒரு மாணவனாலேயே இன்றைய உலகை வெற்றிகரமாக எதிர் கொள்ள முடியும்.

**தொடர்பாடல் திறன்**

தொடர்பாடல் திறன் எனும் போது அதனுள் பல விடயங்கள் உள்ளடக்கப்படினும் பிரதானமாக மொழியினை லாவகமாக கையாளுதலே முதன்மை பெறும். தாய்மொழி தவிர்ந்த எனைய மொழிகளில் உள்ள தேர்ச்சி ஒரு மனிதனை இன்னொரு மனிதனுக்கு சமனாக்குகின்றது. எத்தனை மொழிகளை நாம் பேசும் திறன் மிக்கவர்களாக இருக்கின்றோமோ நாம் அத்தனை மனிதர்களுக்கு சமமானவர்கள். மொழிப்புலமை எனும் போது குறிப்பாக ஆங்கில மொழிப்புலமை முக்கிய மானதாக கருதப்படுகின்ற போதும் இலங்கை யைப் பொறுத்தவரையில் சிங்கள மொழியை யும் பொருத்தப்பாட்டுடன் கையாளக் கற்றுக் கொள்ள வேண்டும்.

அதுமட்டுமன்றி அண்மைக்காலமாக வன்முறையற்ற தொடர்பாடல் என்ற விடயம் பற்றியும் பேசப்படுவதையும் தாங்கள் அறிவீர்கள். மற்றவர்களின் மனங்களை காயப்படுத்தாமல் எங்கள் உணர்வுகளை பரிமாறத் தெரிந்து கொள்ளலே வன்முறையற்ற தொடர்பாடல் என்ற அடிப்படையாயினும் இவ்விடயம் அதிகம் ஆழமானதும், அறியப்படவேண்டியதுமாகும். நேரச் சுருக்கம் கருதி அது தொடர்பில் இவ்விடத்தில் அதிகம் குறிப்பிடமுடியவில்லை.

**இடரினைத் தாங்கும் திறன்**

எம்மில் பலர் எமது பொறுப்புக்களின் வழி வரும் சவால்களைச் சந்திக்க திராணியற்று பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டி வருகின்றோம். இந்தத் தயக்கம் வாழ்வில் நாம் அடைய வேண்டிய உன்னதங்களையும் உயர்ச்சிகளையும் வீணாக விழுங்கி விடுகின்றது. எவனொருவன் சவால்களைச் சந்திக்க துணிகின்றானோ அவனால் மட்டுமே சோதனைகளைத் தாண்டி சாதனைகளைப் படைக்க முடியும். உலகில் பெரும் சாதனைகளை நிகழ்த்திய மனிதர்களுள் பலர் தங்கள் முயற்சிகளின் போது பல்வேறு இடர்களைச் சந்தித்து நிமிர்ந்தவர்களே. வலி தாங்கும் கற்களினால் மட்டும் தான் வணக்கத்துக்குரிய சிலைகளாக முடிகின்றது. மாறாக வலியை தாங்க மறுத்த கற்கள் வாசல் படிக் கற்களாக இருந்து மற்றவர் கால்களில் மிதிபடுகின்றது.

அது போன்றே எந்தவொரு விடயத்தையும் தன்னம்பிக்கையோடு பொறுப்பேற்று நடாத்தும் தற்துணிவும் ஒரு மனிதனுக்கு அவசியமானது. அந்தத் தற்துணிவுடன் இணைந்ததாக தலைமைத்துவ, முகாமைத்துவ ஆளுமைத்திறன்கள் இருப்பதுடன் பொறுப்பேற்றலின் விளைவாக விழையும் சவால்களுக்கு முகம் கொடுத்தல் இடரினைத் தாங்குதல் என்பனவற்றுடன், நோக்கினை இலகுவாகச் சென்றடைய தந்திரோபாயத் திட்டமிடல் திறனையும் ஒரு மனிதன் வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும். இதனை எமது மாணவர்களும் பெற்றோர்களும் புரிந்து கொள்வது எதிர்காலத்தை எழில் மிக்கதாக மாற்றும்.

**முரண்பாட்டு முகாமைத்துவத்திறன்**

இன்று எங்கும் மலிந்து கிடக்கும் விடயமாக முரண்பாடுகளே உள்ளன. வீட்டில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் முரண்பாடு, பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் இடையில் முரண்பாடு, பாடசாலையில் ஆசிரியருக்கும் அதிபருக்கும் முரண்பாடு, ஆசிரியர்களிடையே முரண்பாடு, மேலதி காரிக்கும் அவருக்கு கீழே வேலை செய்பவர்களுக்கும் முரண்பாடு என எங்கும் முரண்பாடுகள் மலிந்து கிடக்கின்றன. இம்முரண்பாடுகள் சரியான முறையில் முகாமை செய்யப்படாவிடில் அவற்றின் விளைவுகள் ஒரு நிறுவனத்தின் அது (குடும்பமாகவோ பாடசாலையாகவோ அலுவலகமாகவோ இருக்கலாம்) செயற்பாட்டுத்திறனையும் அமைதியையும் சீர்குலைத்து விடுகின்றன. முரண்பாடுகளை முகாமை செய்வது என்பது தனித்துவமான திறன். முரண்பாடுகளை ஆரோக்கியமான விதத்தில் மாற்றிக் கொள்ளலும் தீமை பயக்கத்தக்க முரண்பாடுகளை முடிவுக்கு கொண்டுவரலும் அவசியமானது. அதற்கான திறன்களை மாணவர்கள் தங்கள் பாடசாலை வாழ்க்கையிலிருந்தே அனுபவங்கள் வாயிலாக பெற்று வளர்தலே எதிர்காலத்தில் அவர்களின் தொழில் வாழ்க்கைக்கு அடித்தளமாக அமையும். முரண்பாடுகளை முகாமை செய்து கொள்வதற்கும் நாம் வாழும் பணிபுரியும் சூழலை மகிழ்ச்சிகரமாக்கிக் கொள்ளவும் நகைச்சுவைத்திறன் அவசியமானது. ஆனால் எமது நகைச்சுவைத்திறன் மற்றவர்களின் மனங்களைப் புண்படுத்திவிடாத அளவுக்கு பார்த்துக் கொள்ளவும் வேண்டும்.

அனைவருக்கும், குறிப்பாக தலைமைத்துவப் பொறுப்புக்களில் இருக்கின்றவர்களுக்கு, இருக்க வேண்டிய மிக முக்கியமான திறன் செவிமடுக்கும் திறன். நம்மில் பலர் மற்றவர்களின் கருத்துக்களுக்கு காது கொடுக்க தயாராக இல்லை. மற்றவர்களின் கருத்துக்களும் பெறுமதியானவையென உணர்கின்ற ஒரு மனிதனால்தான் தனது கருத்துக்களை தெளிவாக முன்வைக்க முடியும். தலைமை த்துவத்தில் இருக்கின்வர்களுக்கு பெரிய காதுகளும் சிறிய வாயும் இருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது. இது செவிமடுக்கும் திறனின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது. செவிமடுக்கும்

திறன் என்பதிலிருந்து கிரகித்தல் திறன் என்பது வேறானது என்பதையும் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

திறன்களில் அதி முக்கியமானது அமுலாக்கும் திறன். இந்த திறன் இலகுவில் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. பலர் நல்ல சிந்தனைக் காவிகளாக இருக்கின்றார்கள். பலரை இருத்தி வைத்து கேட்டால் இந்த உலகத்தை மாற்ற வல்ல பல கருத்துக்கள் குறித்து மணிக் கணக்கில் பேசவல்லவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் அவர்களது சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் ஆற்றல் அவர்களிடம் வறுமையாகவே உள்ளது. செயல்வடிவம் பெறாத எந்த நல்ல சிந்தனையும் சிறுதுளியும் பயனற்றவை. எனவே எமது சிந்தனைகளை அமுலாக்கும் திறன்களை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு விடயத்தை அமுலாக்க விளையும் போது நாம் சவால்களைச் சந்திக்கவும், தீர்மானங்களை எடுக்கவும் மற்றவர்களை வழிநடத்தவும் முரண்பாடு



களை முகாமை செய்யவும் வல்லவர்களாக இருக்க வேண்டியது அவசியமானது.

**திறன்களை வளர்த்துக்கொள்வது எவ்வாறு?**

திறன்கள் என்பன ஒரு மனிதனிடத்தில் இயல்பாகவே ஏற்படுகின்ற விடயங்கள் எனினும் நாம் எமது முயற்சியினால் அவற்றினை வளர்த்துக் கொள்ள முடியம். தனியே புத்தகப் படிப்பும், பரீட்சைப் பெறுபேறுகளின் விளைவுகளுமே எமது வாழ்வைத் தீர்மானிக்கும் என்ற மனப்பக்குவம் முதலிலே மாற வேண்டும். இதனை எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னரே எமது முன்னோர்கள் **ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது** என இயம்பியிருந்தார்கள்.

எனவே நாம் பாடத்திட்டங்களை பாடமாக்கிக் கொள்வதாலோ அதனை நன்றாக விளங்கி பரீட்சைகளிலே நல்ல மதிப் பெண்களை பெறுவதால் மட்டுமே எமது வெற்றியை தீர்மானித்து விடப் போவதில்லை. நாம் கற்றல் செயற்பாடுகளுடன் சமாந்தரமாக கல்விசாரா இணைப்பாட விதானச் செயற்பாடுகளையும் முன்னிறுத்திச் செல்லும் போதே திறன்களையும் பொருத்தமான அறிவினையும் பெற்றுக் கொள்ள முடியும்.

ஒரு வகுப்பறை கற்றுக்கொடுக்க முடியாத விடயங்களை விளையாட்டு மைதானங்களும், திறந்த வெளிகளும், நண்பர்கள் வட்டமும், சிறந்த சமூகத்தொடர்பும் எமக்கு கற்றுக் கொடுக்கின்றன.

நாம் வகுப்பறைகளை விட்டு வெளியே வரும் போது வானம் எமக்காக திறந்திருக்கும். இந்த இடத்தில் வகுப்பறைகளை விட்டு வெளியே வருதல் என்பதைச் சிலர் வகுப்பறைகளைப் புறக்கணித்தல் அல்லது கைவிடல் எனத் தவறாக அர்த்தம் கொள்ளக் கூடாது.

வகுப்பறைகளைத் தாண்டி வெளியே உங்களுக்காகக் காத்திருக்கும் விளையாட்டு வாய்ப்புக்கள், கழகங்கள் சங்கங்களின் செயற்பாடுகளில் பங்கேற்று தலைமை தாங்க கிடைக்கும் சந்தர்ப்பங்கள், நாடகம் இசை கவிதை பேச்சு கட்டுரை சிறுகதை பொதுஅறி வுப் போட்டி எனப் பங்கேற்கக் கிடைக்கும் வாய்ப்புக்கள் என்பனவற்றைத் தவறாது பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அவை மட்டுமன்றி, நாம் இன்னொரு மிக முக்கியமான விடயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மனிதன் ஒரு சமூக விலங்கு அவன் சமூகத்தோடு இணைந்தே வாழ வேண்டியுள்ளான். சமூகத்தை சாராது எந்த மனிதனும் வாழுதல் என்பது கடினமானதே. இதனை உணர்ந்து நாம் எமது சமூக மயமாகும் திறனை நிச்சயமாக வளர்த்துக் கொள்ள வேண்டும்.

உலக மயமாக்கலின் பல விளைவுகள் இன்று பலரது சமூக மயமாகும் திறன்களை மட்டுப்படுத்தியும் கட்டுப்படுத்தியும் அவர்களை தனிமைப்படுத்தியும் விட்டுள்ளன. இந்த நெருக்கடியை எமது சமூகம் குறிப்பாக வளரும் மாணவர்கள் எதிர் கொள்ளவே கூடாது. இந்த மிகப்பெரிய சவாலைத் தாண்டி எமது பிள்ளைகள் சமூக மயமாகும் தன்மையை அதிகரித்துக் கொள்ள பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாடசாலை, தனியார் கல்வி நிலைய சூழல் என அனைத்துமே வாசல்களைத் திறந்து வழிகளைக் காட்டவேண்டும். இன்று பல பெறுமதிமிக்க தனியார் துறை வேலை வாய்ப்புக்களுக்காக (வங்கிகள்) முதலில் திறன்களை மதிப்பிடும் நேர்முகத் தேர்வுகள் நடாத்தப்பட்டு, தெரிவுசெய்யப்படும் சிலருக்கு மட்டுமே அறிவை மதிப்பீடும் பரீட்சைகள் நடாத்தப்பட்டு நியமனங்கள் வழுங்கப்படுகின்றன.

மாணவர்களே! இவ்வாறு அறிவைத் திறன் மிஞ்சும் சந்தர்ப்பங்களை எதிர்காலத்தில் நீங்கள் பல தடவைகள் சந்திக்க நேரிடும். அதற்காக இன்றே தயாராகுங்கள்.

**முடிவு**

ஆழமாக ஆராயப்படவேண்டிய இவ் விடயம் தொடர்பாக சிறியளவில் ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தத்தக்க விதத்திலேயே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. மாணவர்கள் திறன்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அறிவோடு சமாந்தரமாக திறன்களையும் வளர்க்க வேண்டும் என்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும். உலகளாவிய ரீதியில் சிந்திப்போம். ஆனால் உள்ளுர் அளவிலே செயலாற்றுவோம் (Think Globally but Act Locally) என அனைவரும் இது விடயம் தொடர்பில் திடசங்கற்பம் பூண்டு, சவால் மிக்க உலகை வெற்றி கொண்டு, சாதனைகளைப் படைக்க எமது மாணவர்களைத் தயார்ப்படுத்துவோம்.

மாணவர்களே பலவகைகளிலும் சவால் மிக்கதாக அமையவுள்ள எமது இனத்தின் எதிர்கால வாழ்வு மாணவர்களாகிய உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. வெறுமனே புத்தகப்படிப்பை மட்டும் மையப்படுத்தி வளராது ஆற்றலும், திறனும் உள்ளவர்களாக நீங்கள் நிமிரும் போது உலகம் உங்கள் காலடி களில் பணிந்து நிற்கும். நீங்கள் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு வெற்றிகளும் எங்கள் எல்லோரினதும் பலமான நலமான எதிர்காலத்துக்கு உறுதுணையாக அமையும் என்பதை மறந்து விடாதீர்கள்.

**இ.சர்வேஸ்வரா**
B.Sc (Hons) Spl in Sc & Edu
உதவிப் பதிவாளர்
மருத்துவபீடம் - யாழ்.பல்கலைக்கழகம்.

# கரிசனை வேண்டும்

-வளர்மதி -

சமூகம் என்பது பல்லின கலாசார விழுமியங்கள் நம்பிக்கைகள் வழக்காறுகளைக கொண்ட மக்களின் தொகுதியைக் குறிக்கும். நாகரீக மாற்றம் அச்சமூகத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கலாசார விழுமியங்கள், நம்பிக்கைகள், வழக்காறுகள் என்பனவற்றில் மாற்றங்கள் சிலவற்றை ஆங்காங்கே ஏற்படுத்தியபோதும், கணவனை இழந்த பெண்கள் தொடர்பிலான பர்வையில் சமூகத்தின் பார்வையில் சாதகமான மாற்றங்கள் ஏற்பட்டனவா என்பதில் இன்னமும் ஐயம் நிலவுகின்றது. யுத்தத்தினால் கணவனை இழந்த பெண்கள் பல தளங்களிலும் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அதனால் ஏற்படும் தாக்கங்ளாலும் அவர்கள் தனித்து விடப்பட்டவர்களாகவே



காணப்படுகின் றார்கள். வருமானம் ஈட்டுவதில் ஆண்கள் கொண் டிருந்த பங்கினைப் பெண்கள் சுமக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த தன் பின்னர் குடும்பத் தலைமையைச் சடுதியாக ஏற்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளன. தனியே பொருளாதாரப் பிரச்சினை என்றளவில் மட்டுப் படுத்தப்படாமல் நாளாந்தம் எதிர்நோக்கும் கலா சாரரீதியான பார்வைகளும் புறந்தள்ளல்களும் பாரிய உளசமூகப் பிரச்சினையைத் தோற்றுவிக்கின்றன.

யுத்தத்தினால் கணவனை இழந்த பெண்களில் பெரும்பாலானோர் கல்வி, மற்றும் தொழில்சார் திறன்கள் குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். இதனால் முறைசாராத துறைகளில் மிகக் குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்ய வேண்டிய சூழலே காணப்படுகின்றது. கல்வியுடையவர்களுக்கும் வேலைவாய்ப்பென்பது கடினமான தொன்றாகவே காணப்படுகின்றது.

குழந்தைகளைப் பராமரிப்பதற்கு இயலாத நிலைமை, போதிய திறன்கள் இன்மை, பிரயாணம் செய்வதற்கான வாகன வசதிகள், இதுவரை இருந்த சமூகத் தொடர்பில் காணப்பட்ட வரையறைகள், நவீன தொழில்நுட்ப அறிவின்மை, நாட்கூலி வழங்குதலில் காணப்படும் பாரபட்சங்கள், தமது பிள்ளைகளின் பாடசாலைக் கட்டணங்களைச் செலுத்த முடியாத நிலை போன்றவாறான இன்னல்களை அநுபவித்து வருகின்றார்கள். இதனால் பிள்ளைகளின் கல்வி கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றது. இத்தனை பிரச்சினைகளையும் தனியாகவே எதிர்கொள்ள நேரிடுகின்றது.

கணவனின் இழப்பு, அதனைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள சுமைகள் என்பன உளரீதியான மன அழுத்தங்களையும் உருவாக்கியுள்ளது. மனச்சோர்வு, நெருக்கீடு, நெருக்கீட்டுக்குப் பின்னரான மனவடு, தற்கொலை எண்ணம், மெய்ப்பாட்டு முறைப்பாடு, பதகளிப்பு என்பன அவற்றில் சிலவாகும்.

கணவனின் இறப்பினைத் தொடர்ந்து வீட்டு வேலைகளை மட்டுமன்றி வெளிவேலைகளையும் இவர்களே கவனிக்க வேண்டியுள்ளனர்.

கணவனை இழந்தவர்கள் கலாசார ரீதியான ஓரங்கட்டுதலுக்கும் உள்ளாகின்றார்கள். இவர்கள் மங்கலமற்றவர்கள் என்றும் கணவனின் நினைவுடனேயே வாழ வேண்டுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றார்கள். மறுமணம் என்பது சமூகத்தில் பிரச்சினையான விடயமாகவே இன்னமும் உள்ளது. பல பெண்கள் மறுமணம் செய்வதைத் தாங்களாவே விரும்பவில்லை.

இவ்வாறாக, பலத்த உளரீதியான, சமூக ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பெண்களின் நலன் தொடர்பில் விரைந்து பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

**வருமானம் ஈட்டுவதில் ஆண்கள் கொண்டிருந்த பங்கினைப் பெண்கள் சுமக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தனியே பொருளாதாரப் பிரச்சினை என்றளவில் மட்டுப் படுத்தப் படாமல் நாளாந்தம் எதிர்நோக்கும் கலாசார ரீதியான பார்வைகளும் புறந்தள்ளல்களும் பாரிய உளசமூகப் பிரச்சினையைத் தோற்றுவிக்கின்றன.**

- விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும். சமூகத்தில் பெண் தலைமைத்துவத்துவக் குடும்பங்களுக்கு ஆதரவான முறையில் செயல்படுத்தலின் அவசியத்தை எடுத்துக் கூறல். இது தொடர்பான சமூகப் பார்வையில் மாற்றத்தை ஏற்படுத்தல் வேண்டும்.
- நாளாந்தம் செலவழிக்கும் ஆடம்பரச் செலவின் ஒருபகுதியினை இவ்வாறான குடும்பங்களுக்கு கொடுப்பதற்குச் சமூகம் முன்வருதலைத் தூண்டல் வேண்டும்.
- தொழிற்சாலைகளை அமைத்து இவ்வாறான பெண்களுக்கு தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டும்.
- கணவனை இழந்த பெண்களைத் துன்புறுத்தும் கலாசாரப் பார்வையினை மறுசீரமைத்தல் வேண்டும்.
- கணவனை இழந்த பெண்கள் தொடர்பாக கொள்கை வகுப்பாளர்களுக்கு கூர் உணர்வினை ஏற்படுத்த வேண்டும்.
- ஊடகங்களின் மூலம் சரியான விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் இறப்புப் பத்திரம் மற்றும் ஏனைய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக அறிவுறுத்த வேண்டும்.
- இலவச சட்ட சேவை நிலையங்களை உருவாக்கி, அது தொடர்பான தகவல்கள் மக்களைச் சென்றடைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- மறுமணம் செய்தல் தொடர்பான சமூக ரீதியான பாதகமான எண்ணப்பாடுகளை நீக்க விழிப்புணர்வு நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல் வேண்டும்.
- கணவனை இழந்த பெண்களுக்கான பொருளாதார சமூகப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல். முறைசாரா தொழில்களுக்கும் ஓய்வூதியத் திட்டத்தினை உருவாக்குதல்.

யுத்தத்திற்குப் பின்னர் கணவனை இழந்த பெண்கள் எமது சமூகத்தின் முக்கியமானதொரு சமூகப்பிரிவினராக உள்ளமையால் அவர்களின் வாழ்வு மேம்பாடு தொடர்பில் அனைவரும் ஒன்றுதிரப்பட்டதொரு செயன்முறையை முன்னெடுக்க வேண்டும். அரசியற் தலைவர்கள் இந்த விடயத்திற்கான கரிசனையைத் தங்களது செயற்றிட்டங்களில் அவசியமானதொரு செயற்பாடாக இணைத்துக் கொண்டு பணியாற்றவேண்டும்.

நன்றி மூலத்தகவல் :கோஷம்

# அன்புள்ள தம்பிக்கு...

அன்புள்ள தம்பிக்கு !
வீட்டில் ஊரில் எல்லோரும் நலமா! அங்கு எல்லோரும் தேர்தல்கால அவசரத்தில் உள்ளார்களாம் என்று கேள்வியுற்றேன். சிலருக்கு இருக்கவும்,நிற்கவும் நேரமில்லாமல் அங்கும் இங்குமாகப் பறந்து திரிந்து மக்கள் சந்திப்புக்களை நடாத்துவதாகத் தகவல். உண்மைதானோ? எது என்னவோ, நீ என்ன செய்கின்றாய். பிள்ளைகள் நலம்தானே? தோட்டங்கள் எப்படி. மழை பெய்யவில்லையாம் என்று சோமு அண்ணன் தொலைபேசியில் சொன்னார். உனது பாடு எப்படி?

வாக்காளர் அட்டை வீட்டிற்கு வந்துவிட்டதா. வழமை போன்று எங்கள் அட்டையும் வந்ததா. மீள்பதிவு என்று சொல்லி எங்கள் பெயரை எல்லாம் அழித்து விட்டார்களாமே. அதுதான் இம்முறையும் எங்கள் அட்டை வந்ததோ தெரியவில்லை. அவர்கள் வாக்காளர் பதிவிலிருந்து எங்கள் பெயரை அழித்தாலும், அங்குள்ள மண்ணில் எங்கள் காலடியை அழிக்க முடியமோ?. இல்லை கலந்திருக்கும் நெற்றி வியர்வையைப் பிரிக்க முடியுமோ?. காய்ந்து போன கண்ணீரைத்தான் பிரித்துக் காட்ட முடியுமோ. எவர் என்ன சொன்னாலும் எனது மண்ணை யார்தான் எங்களிடமிருந்து பிரிக்க முடியும்.

அது போகட்டும். கடந்த வாரம் அங்கு விடுமுறையில் வந்திருந்த கண்ணபிரான் குடும்பத்தார் இங்கு விடுமுறை முடித்துத் திரும்பியிருக்கின்றார்கள். நீ குடுத்து அனுப்பிய பனாங்கட்டி, ஒடியல் மா அத்தனையும் கிடைத்தது. என்னதான் புதுபுதுப் பானங்கள், பழங்கள் வந்தாலும் நம் ஊர்ப் பனைக்கு அது பின்னர்தான்.

அத விட்டா தம்பி, கண்ணபிரான் சொன்னது எல்லாம் மெய்தானோ? என்னால் நம்பவும் முடியவில்லை. நம்பாலும் இருக்க முடியவில்லை. தேர்தல் நிலவரங்களைப் பற்றிக் கேட்க அவர் சொன்னதைக் கேட்டபோது, மனசுக்குக் கவலையா இருக்குதே. ஏன் இப்படி?

எங்கட ஆக்கள் எல்லாரும் ஒற்றுமையா இருக்க வேண்டும் என்றுதானே நாங்கள் இவ்வளவத்தச் செய்தனாங்கள். ஆனால் இண்டைக்குப் பெயரளவில தானே ஒண்டா நிக்கினமாமே. எது எப்படியிருந்தாலும், குழப்பமில்லாமல் எல்லாரும் ஒண்டா ஒற்றுமையாச் சேந்து நிண்டாத்தானே எல்லாத்தையும் சாதிக்கலாம்.

அது போக, முந்தி ஆவேசமாப் பேசின கன பேர் இப்ப பேசுறது என்ன எண்டு தெரியாம பேசினமாமே. உண்மையாத்தானோ?

அட, அதவிட இனனும் ஒண்டு கேள்விப்பட்டேன். அது யாரடா தம்பி யாரோ ஒரு பெடியன் ஊருக்குள்ள புதுசா வந்து நிண்டு, அண்ணன் தம்பி உறவு கொண்டாடி, சினிமாப் படத்து ஸ்ரைலில கூட்டமாத் திரியுறாராம். ஆர் அந்தப் பொடியன். எப்படா எங்கட ஊருக்கு வந்தவன். மழைக்கு முளைச்ச காளான் போல கனபேர் வந்து போவினம். நீ அது இதுகளக் கேட்டு ஒண்டும் குழம்பிப்போகக் கூடாது. அட மழையெண்டு சொல்லத்தான் ஞாபகம் வருகுது. இப்பவும் ஊருல டெங்குப் பிரச்சினை இருக்கோ. கவனம் பிள்ளைகளை வச்சிருக்கிறாய் வீட்டத் துப்புரப்படுத்தி வைச்சுக் கொள். பழைய இரும்புகள், சாமான்கள் இருந்தா இரும்பு வாங்குறவங்களட்ட குடுத்து வளவ துப்புரவா வச்சுக்கொள்.

இந்தமுறைத் தேர்தலில நம்மட இளம்பொடியள் கனபேர் நிக்கிறாங்களாம் எண்டு கேள்விப்பட்டேன். அடுத்த தலைமுறைகள் வளர்ந்து வாறது நல்ல விடயம்தான். எவ்வளவு காலத்திற்குத்தான் இந்தப் பழைய சுருதிகளையே நாங்க வச்சுக் கச்சேரி நடத்துறது.

கச்சேரி என்று சொன்னவுடன்தான் ஞாபகம் வருகுது. தேர்தலுக்கு ஆளாளுக்குப் பாட்டுக்கள் எல்லாம் போட்டு தேர்தல் களைகட்டுதாமே. எல்லாரும் தனக்குப் பின்னால எழுத்து வா, புறப்பட்டு வா என்று கூப்பிடுறினமாம். என்னடா நடக்குது அங்க. நாங்க புறப்பட்டது காணாதெண்டு இவங்களும் வெளிக்கிட்டாங்களோ.

சரிசரி யார் எதச் சொன்னால் என்ன. எப்பிடித் தலைகீழா நிண்டால் என்ன. நீ இதுகளக் கண்டு குழம்பாம, நிதானமா நடந்துகொள். நாங்கள் எப்பவுமே நாங்கள்தான் எண்டத எல்லாருக்கும் சொல்லி வை. நாங்கள் எப்பவும் விட்டுக் கொடுக்கக்கூடாத ஒரு விடயம்தான் எங்கட தனித்துவம். அத மறக்கக்கூடாது தம்பி. விளக்கமா பிறகு skypeஇல பேசுறன் கட்டாயம் போய் வாக்கு போடு. வரும்போது என்ர வளவையும் பார்த்துக்கொண்டு வா. வீட்டையும் மறந்திடாத.

இப்படிக்கு
கனடாவிலிருந்து
அன்புள்ள மாமா

# சிந்தித்து முடிவெடுப்போம்

மாற்றத்தை நோக்கியதாக மானிடத்தெரிவுகள் காணப்படுவது வழமை. குறிப்பாகத் தமிழர் அரசியல் தெரிவுகள் பலகாலமாக மாற்றம் கொண்டதாகவே காணப்படுகின்றது. எதிர்பார்ப்புக்களுடனான தெரிவும் அவை நிறைவேறாத போது நிராகரிப்புக்களும் வழமையாகிவிட்டன.

காலம் காலமாக அரசியல் செய்தவர்கள் காலத்தைக் கடத்தியவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்களைக் கடந்த ஒருவரை நீண்ட காலமாக மக்கள் எதிர்பார்த்துக் காத்திருந்தது உண்மையே. அரசியல் சாராத, அரசுக்கு விலை போகாத, அரசுடன் மனபலத்துடன் விவாதிக்கக் கூடிய சட்டநுணுக்கமும் பரந்துபட்ட அறிவும் கொண்ட வயது முதிர்ச்சி, நிர்வாகத்திறன், தமிழ்ப்பற்று, சமுதாயத் தூரநோக்கு, சர்வதேச அங்கீகாரம் மற்றும் தனிப்பட்ட இலாபநோக்கற்ற அனைத்து இனத்தவராலும் மதிக்கத்தக்கது போன்ற இயல்புகளில் பலவற்றைக் கொண்ட ஒருவர் அரசியல் களத்தில் இல்லாததை எண்ணி ஏங்கிய மக்களுக்கு தற்போது ஒருவர் கிடைத்துள்ளார்.

மக்களிடம் பல்வேறு எண்ணம் கொண்ட பிரிவினரும் காணப்படுகின்றனர். அவர்களுள் ஒரு பிரிவினர் தகுதிநிலை நம்பிக்கை போன்றவற்றை எதிர்பார்ப்பவர்கள் உள்ளார்கள். இவர் வந்தால் உதவிகளும் வேலைவாய்ப்புக்களும் கிடைக்கும் என்ற எண்ணம் கொண்ட மற்றொரு பிரிவினரும் உள்ளார்கள். அதிலும் சிலர் இவர் வந்தால் மட்டுமே வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கை உடையவர்களும் உள்ளார்கள். இப்படியான எண்ணம் கொண்டவர்கள் கணிசமான அளவில் உள்ளார்கள். காரணம் நடுத்தர, கீழ்த்தர மக்களிடையே வேலையில்லாப் பிரச்சனை பூதாகாரமாக உருவெடுத்துள்ளது. "எம்மால் மட்டுமே முடியும்" என்ற மூட நம்பிக்கையை மக்கள் மனங்களில் சில அரசியல்வாதிகள் புதைத்து வைத்துள்ளனர்.

சுருங்கக்கூறின் இணக்க அரசியலா எதிர்ப்பு அரசியலா என்ற வினாவுக்கு எதிர்ப்பரசியலூடாக இணக்கப்பாட்டு அரசியலை வென்றெடுக்கக்கூடிய ஒருவரே தெரிவாக இருந்தாலும் பெரும்பான்மைப் பலத்துடனான வெற்றி என்பது மேற்கூறிய காரணங்களால் சந்தேகமே.

அபிமன்யு

# சிரஞ்சீவியாக... 4 வி.பி எனப்படும். வ.பொன்னம்பலம்

இவர் அளவெட்டியிலுள்ள பாடசாலைகளில் கற்று ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் உயர் கல்வியை முடித்த பின் பட்டப்படிப்பிற்காக இந்தியா சென்றார். அங்கு முது கலைமாணி படிப்பையும் முடித்துக் கொண்டு திரும்பினார். இவர் அக்காலத்தில் பிரபலம் வாய்ந்திருந்த பொதுவுடமைக் கொள்ளையின்பால் ஈர்க்கப்பட்டார். ஆரம்பத்தில் தந்தை செல்வாவின் தலைமையில் ஆரம்பமான தமிழரசுக் கட்சி யில் இணைந்திருந்தபோதும் பின்னர் 'கொம்மியூனிஸ்ட்' என்னும் பொதுவுடமைக் கட்சியில் இணைந்து கொண்டு இக்கட்சியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்.

பொன்னம்பலம் சிறந்த பேச்சாளர் என்பதிலும் பொது நலத் தொண்டர் என்பதி லும் எவருக்கும் மாறுபட்ட கருத் திருக்கமுடியாது. இவர் தமது கவர்ச்சிகரமான மேடைப் பேச்சின் மூலம் பலரைத் தன்பால் ஈர்த்தார். பொதுவுடமை தத்துவத்தை விரும்பாத, விளங்காத மக்களைக் கூட அவருடைய பேச்சாற்றல் கவர்ந்திழுத்தது. சிறுபான்மைத் தமிழர் பெரும்பாலோர் அவரது கட்சிக்கு ஆதரவு வழங்க முன் வந்தனர். இப்படி ஆதரவு பெற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் பல முறை போட்டியிட்டும் ஒரு முறையாவது வெல்ல முடியாது போயிற்று. அவர் தமிழரசுக் கட்சியில் இணைந் திருந்தால் அவர் பாராளு மன்றத் துக்கு தெரிவாகியிருப்பார் என்பதில் ஐயமே யில்லை.

இவர் பொதுப் பணிகளில் ஈடுபட்டு மக்களுக்கு நல்ல சேவையாற்றியவர் என்பதை எவரும் மறுக்கமாட்டார். அளவெட்டி மத்திய ஐக்கிய பண்டகசாலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாக மாற்றப் பட்டபின் அச்சங்க நிர் வாகிகள் கூட்டுறவுச் சங்க விதிகளுக்கு மாறாக நடந்து கொண்டதால் கூட்டுறவு ஆணையா ளர் அத்தவறினைச் சுட்டிக்காட்டிய போது அந்நிர்வாகத்திலிருந்த அத்தனை பேரும் பதவி யைத் துறந்தனர். அதன் மேல் நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் பொன்னம்பலம் தலைவராக தேர்ந்தெடுக்கக்கப்பட்டார். இவருடைய இயக்குனர் சபை சங்க வெள்ளி விழாவைச் சிறப்புற நடத்தியதோடு சங்கத்தையும் ஊழல் இன்றி நிருவகித்தது. அதனால் கூட்டுறவாளர்களின் பாராட்டும் பொன்னம்பலம் அவர்களுக்கு கிடைத்தது.

கூட்டுறவுத் திணைக்களம் சிந்திப்பதற்கு முன்னமே அளவெட்டி ப.நோ.கூ. சங்கம் அளவெட்டியில் நட்டத்தில் இயங்கியவையும் இயங்காதவையுமான சங்கங்களைத் தமது நிர்வாகத்தின் கீழ்க் கொண்டுவந்தது. 1971ம் ஆண்டில் அரசாங்கம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் பல பண்டசாலைகளை இணைக்கும் சட்டத்தைக் கொண்டு வந்தபோது, வலிவடக்கில் தெல்லிப்பளைக் கூட்டுறவுச்சங்கத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பண்டசாலைச் சங்கங்கள் இணைக்கப்பட்டன. சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கமும் அவ்வண்ணமேயாயிற்று. பொன்னம்பலம் அவர்களுக்கு அப்போது அரசியலிற் செல்வாக்கு இருந்ததால் அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் என ஒரு சங்கம் உருவாக்கப்பட்டது. பொன்னம்பலம் கூட்டுறவிலிணைந்து செயற்படாவிட்டால் அளவெட்டி மல்லாகம் கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்படாமல் அங்குள்ள பண்டசாலைகள் தெல்லிப்பழை அல்லது சுன்னாகம் சங்கத்துடன் இணைக்கப்பட்டிருக்குமென்பது உண்மையாகும். ஆரம்பத்தில் பொன்னம்பலம் அவர்களே அளவெட்டி மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவருமானார். அரசாங்கத்தில் சுதந்திரக்கட்சியின் செல்வாக்கு மிக்கிருந்ததால் பின்னர் அக்கட்சியைச் சேர்ந்த வ. முருகையா என்பவர் தலைவரானார்.

பொன்னம்பலமவர்கள் அளவெட்டி மல்லாகம் கிராம சபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதற்கும் அவர் அளவெட்டி மல்லாகம் கூட்டுறவுச் சங்கத்தலைவராக இருந்து ஆற்றிய சேவையே காரணமாகும். கிராமசபைத் தலைவராக இருந்த காலத்தில் அவராற்றிய சேவைகள் பலவாகும்.

முன்னைய காலத்தில் கீழிச் சந்தையெனும் பெயருள்ள சந்தை நடந்து வந்த காணி அரசினர்க்குரியதாயிருந்தது. அந்நிலம் ஒன்றுக்கும் பயன்படாமல் இருந்தது. அதனைப் பயன்படுத்தி சமாச மண்டபம் என்றொரு மண்டபத்தை மல்லாகம் கிராமசபைக்குரியதாகக் கட்டுவித்தார். அதில் கிராமசபையின் வாசிகசாலையொன்று நடைபெறுவதற்கான ஒழுங்குகளையுஞ் செய்தார். அவ்வாசிகசாலை இன்று பல பத்திரிகைகளையும் பல புத்தகங் களையும் கொண்டதாய் பலர் வாசிப்பதற்கும் புத்தகம் பெறுவதற்கும் உரிய இடமாக இயங்குவது அவருக்கு பெருமை சேர்ப்ப தாக உள்ளது. அங்கு வாசிகசாலைப் பொறுப்பாளர் ஒருவரும் உதவியாளரும் பணிபுரிகின்றனர்.

அளவெட்டி தெற்கில் வாழ் மக்களுக்கு மறக்கறி வாங்கவும் புலாலுணவு பெறவும் சந்தையில்லாக் குறை நெடுநாளாக நிலவி வந்தது. அக்குறையைப் போக்கியவரும் பொன்னம்பலம் அவர்களே. அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்குப் பக்கத்திலுள்ள மலைவேம்படி என்னுமிடத்தில் தனியார் காணியொன்றைக் குத்தகைக்கு பெற்று ஒரு சந்தையை உருவாக்கினார். அச்சந்தை நல்ல முறையில் நடந்து மக்களுடைய பொருள்களை வாங்குமிடமாகவும் விற்குமிடமாகவும் செயற்பட்டு வந்தது. மல்லாகம் கிராம சபைத் தலைவராக பின்னாளில் வந்த சுவாமிநாதன் பாஸ்கரன் என்பார் அச் சந்தைக்கு எதிர்ப்பு றமாகவிருந்த காணியை கிராமசபைக்காக கொள்வனவு செய்து அக் காணியில் சந்தைக்கெனக் கட்டிடமும் அமைத்துக் கொடுத்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பொன்னம்பலம் அவர்களை பெரும்பான்மை சிங்களவரைக் கொண்ட பொதுவுடமைக்கட்சி சமத்துவமாக நடத்த முன்வரவில்லை. அதனால் விரக்தியடைந்த இவர் அக்கட்சி அங்கத்துவ பதவியையும் துறந்தார். பழையபடி தமிழரசுக் கட்சியை நாடினார். தேர்தலில் கட்சியின் வெற்றிக்காகவும்

# சுவாமி வம்பானந்தா

## "புரிந்தால் புன்னகை செய், புதிர் என்றால் புருவம் உயர்த்து பிதற்றல் எனத் தோன்றின் பிழையும் திருத்து"

■ கமல்ஹாசன்

எல்லாரும் கொழும்புக்குப் போய்வருகினம் நானும் ஒருக்கால் போய்வருவம் எண்டு குளிருகிற பஸ் ஒண்டிலை ஏறி போன கிழமை கொழும்புக்குப் போனன் பாருங்கோ. பண்ணையிலை வந்து பஸ் ஏறின பெட்டை ஒருத்தி கூட வந்த பொடியனோடை தொடர்ந்து சிங்களத்தில பிழை பிழையாய் கதைச்சுக் கொண்டிருந்துது. வழியனுப்ப வந்தவையோடை பெட்டை கதைச்சதை பிராக்குப் பார்த்ததிலை கொழும்பு தாண்டி தையல் வேலை செய்யுது எண்டு தெரிஞ்சுது. கூட வந்த பொடியனும் தமிழ்ப்பொடியன்தான். சிங்களம் கதைச்சால் மற்றவை மதிப்பினம் எண்டு நினைக்கினமோ இல்லாட்டில் தமிழ் கதைச்சால் மதிக்க மாட்டினம் எண்டு நினைக்கினமோ தெரியயில்லை.

பஸ் கொண்டக்ரர் பொடியனும் யாழ்ப்பாணத்துப் பொடியன்தான். அண்ணை வாங்கோ தெகிவளையிலை இறக்கிவிடலாம் எண்டு நல்ல தமிழிலை தான் கதைச்சவன். மரியான் எண்டு புதுப்படமும் போட்டுக்காட்டினவன். மதவாச்சி தாண்டின உடனை சிங்களக் குத்துப்பாட்டுப் போட்டிட்டு சிங்களத்திலை கதைக்கத் தொடங்கியிட்டான். இவ்வவுக்கும் பஸ்சிலை இருந்தவை எல்லாரும் தமிழ் ஆக்கள்தான் பாருங்கோ. தமிழ் கதைச்சால் தமிழ்ப்பாட்டுப் போட்டால் இனக்கலவரம் வரும் எண்டு ஆரும் சொன்னவையோ தெரியயில்லை. சிங்களவர் எங்களை மதிச்சாலும் நாங்கள் எங்களை ஒருகாலமும் மதிக்க மாட்டம் பாருங்கோ. நாங்களே எங்களை மதிக்கிறதில்லை. இதிலை மற்றவன் எங்களை சமமாய் மதிக்கவேணும் எண்டு பேசித்திரியிறது சிரிப்பாயில்லையோ?

✦ ✦ ✦

நக்குகிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கம் என்ன எண்டு ஒரு கதை இருக்குதல்லோ. இஞ்சை மனிதாபிமான மீட்பு நடவடிக்கை செய்த பச்சைச்சட்டைக்காரர் 860 பேர் ஹெய்டியிலை போய் அமைதிப்பணி செய்யினமல்லோ. உலகப்பெரிய மன்றத்தின்ரை அமைதிப்படையிலை பணி செய்யிற இவையள் நாங்கள் உள்ளூரிலையும் இப்பிடித்தான் இருந்தனாங்கள் எண்டு ஊர்ப்பழக்கத்தை அங்கையும் அடிக்கடி செய்து காட்டுகினமாம். கடைசியா நடந்த சம்பவத்திலை எங்கடை அதிகாரி ஒருத்தர் 18வயதுப் பொம்பிளைப் பிள்ளையோடை மனிதாபிமான மீட்பு நடவடிக்கை செய்தவராம். போன சனிக்கிழமை றோட்டாலை போன பிள்ளையைப் பிடிச்சு ஆருமில்லாத கட்டடப் பகுதிக்கு இழுத்துப்போய் நல்லுறவுக்குட்படுத்தினவராம்.

எங்களுக்கு அவை என்ன செய்தவை எண்டு நாங்கள் உலகத்துக்குச் சொல்லி களைச்சுப்போன கனவிசயத்தை இப்ப அவை சொல்லிக் கொண்டிருக்கினம். உலகம்தான் கவனிக்குதோ என்னவோ தெரியயில்லை.

✦ ✦ ✦

நங்கூரம் கௌதமபுத்தர், ஆனந்தமான சங்கதிக்காரன் புதிசாய் நாடகக்கோஷ்டியிலை அறிமுகமானவையல்லோ. இவையளைப்பற்றி பழையதுகளைத்தேடி எடுத்து கொஞ்சப்பேர் சொன்ன செய்தியளை கேட்க கொஞ்சம் கஷ்டமாய்தான் இருக்குது. இதிலை கௌதமபுத்தர் மூண்டு வருஷத்துக்கு முந்தி அரசாங்கம்தான் புலிகளை அழிச்சது எண்டு சொன்னால் அது பிழை. அதில எமது புல்லட் நங்கூர அமைப்பின்ரை பங்களிப்பும் அளவிட ஏலாதது எண்டு பேட்டி குடுத்தவராம்

"இறுதி நேர மனிதாபிமான மீட்பிலை சீருடையள் தமிழ் மக்களைக் கொண்டது எண்டு நான் சொல்ல மாட்டேன். நுண்ணியமான முறையிலை சீருடையள் தாக்குதல்களை மேற்கொண்டவை எண்டும் மெச்சினவராம்.

"போனமுறை பெரிய திருவிழாவிலை நாடகக்கோஷ்டி 4,000 வாக்குகளாலை மட்டுமே வெண்டது. இதின்ரை அர்த்தம் என்ன வெண்டால் கணிசமான தமிழ் மக்கள் அரசாங்கத்துக்கு வாக்களிச்சவை எண்டதுதான். அப்பிடியெண்டால் அரசாங்கம் போர் குற்றம் செய்யயில்லைத்தானே எண்டு செர்கெய் டி சில்வா-ரணசிங்கே எண்டவருக்கு நிறுவிக்காட்டினவராம்.

இவரோடை கூட இருந்த பழக்கமோ தெரியயில்லை கௌதம புத்தரோடை இவ்வளவு காலமும் கூட இருந்த இரண்டு பேர் இந்த நேரம் பார்த்து நீலக்கட்சிக்குள்ளை போயிட்டாங்கள். இவையெல்லாம் எங்களுக்கு தலைமை தாங்கி வழிகாட்டப்போகினம் எண்டு நான் சொன்னால் நீங்கள் நம்புவியளோ?.

✦ ✦ ✦

வாத்திமார் பாடம் மட்டும்தான் எடுப்பினம் எண்டு நீங்கள் பிழையாய் நினைக்கக்கூடாது. இப்ப கனபேர் படமும் எடுக்கினம். ஒருத்தர் தன்னட்டை தனிப்பட்ட வகுப்புக்கு வாற பொம்பிளைப்பிள்ளையள் பாத்ரூம் போறதைப் படம் பிடிச்சு ஆவணப்படம் செய்தவராம். இன்னொருத்தர் பஸ் தரிப்பிடத்திலை காத்திருந்த மாணவியை கடத்திப் போய் பலவந்தமாக நிர்வாணப்படுத்தி கையடக்கத் தொலைபேசியிலை படமெடுத்தவராம்.

இருக்கிற நேரத்தை தொலைக்க உதவுறதாலை தொலைபேசி. நாயாய் அலைஞ்சு செய்யிற காரியங்களை பேசியே செய்யிறதாலை அலைபேசி. நேரிலை சொல்ல வெட்கப்படுகிற விசயங்களை கடிதமாய் எழுதி கையாளிட்டைக்குடுக்க வேணும் எண்ட நிலைமை போய் இப்ப வெட்கமில்லாமல் போனிலையே வெட்கப்படுகிற விசயங்களை மெசேச் போடகை குடுக்கிறதாலை கைபேசி. இதெல்லாம் சரி பாடம் எடுக்கிறவை அதை விட்டிட்டு படமெடுக்க உதவுதல்லோ இதுக்கு என்ன காரணப்பேர் வைக்கலாம்.

✦ ✦ ✦

முத்துக்குமார், செங்கொடி, எண்ட வரிசையிலை கடைசியாய் செந்தில் குமார். எங்கடை விடுதலை நெருப்பு இன்னும் அணையயில்லைப்பாருங்கோ. சேய்தி வந்த உடனே தீக்குளிச்சவர் இலங்கையரா எண்டதை உறுதிப்படுத்த முடியாமலிருந்ததாம் . ஆனால் கடைசியாய் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர் எண்டு சொல்லுகினம்.

அடர்த்தியான ஜெலி மாதிரியான திரவத்தை எடுத்து தன் மீது பூசிக்கொண்டு கண் இமைக்கும் நேரத்தில் கொளுத்தி கொண்டான்! கொழுந்து விட்டு சுவாலையாக எரியும் போது எந்த சலனமும் இன்றி சில கோஷங்களை மட்டும் சொல்லிவிட்டு ஒரே இடத்தில் அப்படியே ஆடாமல் அசையாமல் நின்று எரிந்து முடித்து கீழே விழுந்தான். எண்ட செய்தி எங்கடை திருவிழாக் கோஷத்துக்கை அவளவு சோபிக்கயில்லை. ஆராக இருந்தாலும் உயிர்க்கொடை செய்தவனுக்கு வணக்கம் செய்யிறது தவறில்லைப்பாருங்கோ. திருவிழாப் பிராக்கிலை அதைச்செய்யாட்டிலும் பரவாயில்லை. இப்பிடி ஆயிரக்கணக்கான உயிர்கொடையாளிகள் மூட்டின தீயிலை குளிர்காயாமல் விட்டால் அது காணும்

✦ ✦ ✦

அடுத்த முறை நடந்து முடிஞ்ச திருவிழாவைப்பற்றி விரிவாய்க் கதைப்பம். நீங்கள் vampanantha@gmail.com க்கு தொடர்ந்து எழுதுங்கோ. அடுத்த பேப்பரிலை சந்திப்பம்.

---

உழைத்தார். கட்சி அத்தேர்தலில் பெரும் வெற்றியீட்ட இவரின் ஒத்துழைப்பும் ஒரு காரணம் எனலாம். இந்த ஞானம் இவருக்கு முன்னமே வந்திருந்தால் இவர் பாராளுமன்ற உறுப்பினராவது நிச்சயத்தில் நிச்சயமே. இக்கிராமத்துக்குத் தொண்டு செய்த பெருமக்கள் வரிசையில் இவருக்கும் சிறப்பான ஓரிடமுண்டென்பதில் ஐயமில்லை.

வி.பியின் வாழ்க்கைக் குறிப்புக்கள்

**1952**: மல்லாகம் கிராம சபை உறுப்பினராகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

**1954**: ஆவணி மாதத்தில் திரு.அ.அமிர்தலிங்கம் அவர்களுடன் சங்கானையில் ஒரே மேடையில் விவாதம். திரு.அமிர்தலிங்கம் அவர்களின் திருமணப்பதிவு நடைபெற்ற அதே தினமே அக்கூட்டம் நடைபெற்றது.

**1956**: காங்கேசன்துறைத் தொகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் முதல் தடவையாக திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகம், திரு.சு.நடேசபிள்ளை ஆகியோருடன் போட்டியிடுதல். இத்தேர்தலில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப் படுகிறார். 5000க்கும் சற்றுக் கூடுதலான வாக்குகளை வி.பி. பெறுகிறார்.

**1960**: மார்ச் பொதுத் தேர்தலில் உடுவில் தொகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளராகப் போட்டியிடல். தமிழரசுக் கட்சியின் சார்பில் இவரது நெருங்கிய நண்பர் திரு.வி.தர்மலிங்கமும், சமசமாஜக் கட்சி சார்பில் திரு.பி.நாகலிங்கமும், தமிழ் காங்கிரஸ் சார்பில் ஆசிரியர் திரு.சிவநேசன், அவர்களும் சுயேச்சை வேட்பாளராக சிறந்த கல்விமானும் முதுபெரும் இடதுசாரியுமான திரு.கன்டி பேரின்பநாயகம் அவர்களும் போட்டியிட்டனர். தேர்தலில் திரு.வி.தர்மலிங்கம் வெற்றி பெற்றார். ஆயினும் வி.பி. - தர்மர் நட்பு தொடர்ந்து வளர்ந்தது.

**1962**: மல்லாகம் - அளவெட்டிக் கிராம சபையின் உப தலைவராகத் தெரிவு.

அளவெட்டி - மல்லாகம் இணைந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமாக விரிவாக்கம் செய்தல். இலங்கையிலேயே இரண்டாவது கூட்டுறவுக் கிராமிய வங்கியை ஆரம்பித்தல். இதன் மூலம் விவசாயிகள் கடன் பணம் பெறும் வசதி உண்டானது.

**1970**: காங்கேசன்துறைத் தொகுதிக்கான தேர்தலில் ஐக்கிய முன்னனி வேட்பாளராக பெரியார் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், பேராசிரியர்சி.சுந்தரலிங்கம் திரு.எஸ்.திருநாவுக்கரசு, பாரிஸ்டர் அம்பலவாணர் ஆகியோரை எதிர்த்துப் போட்டியிட்டு எண்ணாயிரத்துக்கதிகமான வாக்குகள் பெற்று இரண்டாவதாக வந்தார்.

**1971**: இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாட்டில் இனப்பிரச்சனைக்குரிய தீர்வாக தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு வற்புறுத்தல்.

**1975**: வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காங்கேசன்துறை இடைத் தேர்தலில் ஐக்கிய முன்னனி வேட்பாளராக வி.பி. பெரியார் செல்வநாயகத்தை எதிர்த்துப் போட்டியிட்டார். தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வாக கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் ஒப்புதல் பெற்ற ஐந்து அம்சத்திட்டத்தை தனது தேர்தல் உறுதிமொழியாகக் கொண்டு அதனை கைநூலாக வெளியிட்டுத் தொகுதியெங்கும் தீவிர பிரசாரம் செய்தார். தேர்தல் வேட்புமனுத் தாக்கலுக்கு முதல்நாள் இரவு ஐக்கிய முன்னணி அரசின் பிரதிநிதிகளான அமைச்சர்கள் குமாரசூரியர், பீற்றர்கெனமன், லெஸ்லி குணவர்த்தனா ஆகியோர் காங்கேசன்துறையில் வைத்து வி.பி.யை சந்தித்தனர். இச்சந்திப்பின் போது அமைச்சர் குமாரசூரியர் ஐந்து அம்சத் திட்டம் கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டமே தவிர ஐக்கிய முன்னனி அரசின் திட்டமல்ல என்ற கருத்தை முன்வைத்தார். வி.பி. குழப்பமடைந்த நிலையில் தேர்தலில் போட்டியிட மறுப்புத் தெரிவித்து வீடு திரும்பினார். அன்றிரவு அவரது வீட்டில் வைத்து தோழர் பீற்றர் கெனமன் இனப்பிரச்சனைக்கு மூன்று மாத காலத்திற்குள் தீர்வு காணப்படும் என அளித்த உறுதிமொழியை ஏற்று வி.பி. வேட்புமனுத்தாக்கல் செய்து தேர்தலில் போட்டியிட்டார். இத்தேர்தலில் ஏறக்குறைய பத்தாயிரம் வாக்குகளைப் பெற்றார்.

**1976**: பீற்றர் கெனமனால் அளிக்கப்பட்ட உறுதிமொழி காற்றில் பறக்க விடப்பட்டதையடுத்து கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக்கிளை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் படி மத்திய குழுவுக்கு ஏகமனதாக பரிந்துரை செய்தது.இதனை கட்சி ஏற்கமறுக்க கட்சியிலிருந்து விலகி தமிழர் மத்தியில் உள்ள இடதுசாரிச் சிந்தனை கொண்டவர்களை ஒருமுகப்படுத்தி தமிழ் பேசும் மக்கள் இயக்கமாக "செந்தமிழர் இயக்கம்" என்ற அமைப்பினை உருவாக்கி அதனைத் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைத்துச் செயல்பட முனைந்தார்.

**1983**: மன்னாரில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநில மாநாட்டில் பொருாதார செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். யூலை இனப்படுகொலையைத் தொடர்ந்து நாட்டில் எழுந்த அரசியல் சூழ்நிலை காரணமாக கூட்டணித் தலைவர்களோடு தமிழ் நாட்டுக்குச் சென்றார்.

**1994:** பங்குனி 5ம் திகதி ஒறேற்றர் திரு.சுப்பிரமணியம் அவர்களின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றி முடித்து "உங்களிடம் இருந்து விடை பெறுகிறேன்" என சபையோருக்கு கை கூப்பி வணக்கம் கூறி இவ்வுலக வாழ்வினின்றும் விடை பெற்றுக் கொண்டார்.

நன்றி : வேரூன்றி விழுதுபரப்பும் ஆலமரம் நூல்

# அகிம்சைப் பாதையின் ஆளுமைகள்

## செப்ரெம்பர் 21 சர்வதேச சமாதான தினத்தை யொட்டிய நமது முரசொலியின் சிறப்புப் பதிவு

தொகுப்பு: பார்த்தீபன்





மரணித்தும் மக்கள் மனம் மறக்காத தலைவன், பாலஸ்தீன விடுதலைப் போராட்டத் தளபதி, பாலஸ்தீனிய ராஜ்யத்தின் முதல் தலைவர் யாசிர் அரஃபாத்.பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவராக செயலாற்றியவர். அபூ அம்மார் என்று அவரது ஆதரவாளர்களால் அழைக்கப்பட்டார். 1994 இல் அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மூவரில் ஒருவர். சுயநிர்ணய-பாலஸ்தீனம் என்ற பெயரில் இஸ்ரேலுக்கு எதிராக மிகவும் வலிமையான போராட்டம் நடத்தியவர் . அவர் இஸ்ரேல் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்து ஈடுபட்டு பல தசாப்தங்கள் மோதலுக்கு முடிவு எட்ட முயற்சித்தார். அவற்றின் மத்தியில் முக்கியமானவை - 1991 மாட்ரிட் மாநாடு, 1993 ஒஸ்லோ உடன்பாடு மற்றும் 2000 காம்ப் டேவிட் உச்சி மாநாடு.

2004 ஆம் ஆண்டு அக்டோபர் 25 அன்று திடீரென நோயுற்றதால் கூட்டத்தில் வாந்தி எடுத்தார். துனிஸிய, ஜோர்டானிய மற்றும் எகிப்திய மருத்துவர்களின் பரிசோதனைக்குப் பின் இவர் பிரான்ஸ் நாட்டின் " பெர்சி ராணுவ மருத்துவமனை " யில் அனுமதிக்கப்பட்ட இவர் நவம்பர் 3 ஆம் நாள் கோமா நிலைக்குச் சென்றார்.நவம்பர் 11 அன்று தனது 75 ஆவது வயதில் அவர் இறப்பை எய்தினார். இறுதி ஊர்வலத்தின்போது அவரது உடல் பாலஸ்தீனிய கொடியால் போர்க்கப்பட்டு 11 நவம்பர் 2004 இல் பிரெஞ்சில் ஒரு சிறிய விழா நடைபெற்றது. ஒரு இராணுவ இசைக்குழு, பிரஞ்சு மற்றும் பாலஸ்தீன தேசிய கீதங்களை வாசிக்க. பிரஞ்சு ஜனாதிபதி ஜாக் சிராக் அவரை "தைரியத்தின் மனிதன் " எனப் பாராட்டினார். அங்கிருந்து விமானம் மூலம் விமானத்தில் பாரிஸ் இருந்து ஜெருசலெமுக்கு கொண்டுவரப்பட்டு. ரமலாவில் ஒரு " தற்காலிக " கல்லறையில் புதைத்தனர். இஸ்ரேல் அரசு ஜெருசலேமில் அரபாத்தை புதைக்க மறுத்ததால், கல்லறை முசொலி யத்தில் ஜனாதிபதி தலைமையகத்தில் நவம்பர் 10, 2007 இல் திறக்கப்பட்டது.



உலகில் அதிகம் மதிக்கப்படும் தலைவர்களில் ஒருவராக விளங்குபவர் நெல்சன் மண்டேலா தென்னாப்பிரிக்காவின் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் குடியரசுத் தலைவர். தென்ஆப்பிரிக்க நாட்டில் கறுப்பினத்தவர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்தாலும், சிறுபான்மையி னரான வெள்ளையர்களே அங்கு ஆட்சி அமைத்து வந்தார்கள்.

கறுப்பர்களின் நலனை பாதுகாப்பதற்காக "ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ்" கட்சியை உருவாக்கி, இன வெறியை எதிர்த்துப் போராடினார். அரசாங்கத்தின் கடுமையான கெடுபிடியினால் 1961 ம் ஆண்டில் மண்டேலா தலைமறைவாகி, 1962 ம் ஆண்டு கைது செய்யப்படடு 27 ஆண்டு சிறைவாசம் அநுபவித்தார். 1990 இல் அவரது விடுதலைக்குப் பிறகு அமைதியான முறையில் புதிய தென்னாப்பிரிக்கக் குடியரசு மலர்ந்தது. மண்டேலா தற்போது தொண்ணூற்று ஐந்து வயதை அடைந்துள்ளார். உலக சமாதானத்துக்காக மண்டேலா ஆற்றிய சேவைகளைப் பாராட்டி அவர் சிறையில் இருக்கும்போதே இந்திய அரசு "நேரு சமாதான விருது" வழங்கியது. கணவர் சார்பில் வின்னி டெல்லிக்கு வந்து அந்த விருதைப் பெற்றார். 1990-ல் இந்தியாவின் "பாரத ரத்னா" விருதும் அவருக்கு வழங்கப்பட்டது. 1993இல் உலக அமைதிக்கான நோபல் பரிசும் இவருக்கு வழங்கப்பட்டது. அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கான மகாத்மா காந்தி சர்வதேச விருது நெல்சன் மண்டேலாவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவரது பிறந்த நாளான ஜூலை 18ம் தேதியை சர்வதேச நெல்சன் மண்டேலா தினமாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது




மகாத்மா காந்தி இந்திய விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக தலைமையேற்று நடத்தியவர். சத்தியாக்கிரகம் என்றழைக்கப்பட்ட இவரது அறவழிப் போராட்டம் இந்திய நாட்டு விடுதலைக்கு வழி வகுத்ததுடன், கூடவே வேறு சில விடுதலை இயக்கங்களுக்கும் வழி காட்டியாக அமைந்தது. 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8 ஆம் தேதி ஆங்கில அரசுக்கு எதிராக 'ஆகஸ்ட் புரட்சி' என அழைக்கப்படும் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தினை காந்தி தொடங்கி வைத்தார். அதன் விளைவாக, இறுதியில் காந்தியின் இடைவிடாத போராட்டத்தால், 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாள் இந்தியா சுதந்திர தேசமாகியது. 1930 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசு உப்புக்கு வரி விதித்தபோது 'தன்னுடைய நாட்டில் விளைந்த பொருளுக்கு அன்னியர் வரி விதிப்பதா?' எனக் கருதி, சத்தியாகிரக முறையில் இதை எதிர்க்க முடிவு செய்து, 1930 மார்ச் 02 தேதி அகமதாபாத்திலிருந்து சுமார் 240 மைல் தூரத்தில் இருந்த தண்டியை நோக்கி நடைபயணம் மேற்கொண்டார். அகிம்சை என்னும் வார்த்தைக்கு அர்த்தம் சொன்ன மகாத்மா காந்தி 1948 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் நாள் (அதாவது இந்தியா சுதந்திரம் அடைந்த அடுத்த ஆண்டே) புது தில்லியில் நாதுராம் கோட்சே என்பவனால் சுட்டுக்கொல்லப்பட்டார். ஆங்கில ஆட்சிக்கு எதிராகவும், இந்திய விடுதலைக்காகவும் அந்நியப் பொருட்கள் புறக்கணிப்பு, உப்பு சத்தியாகிரகம், வரி கொடா இயக்கம், ஒத்துழையாமை இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் எனப் பல போராட்டங்களை அறவழியில் முன்னெடுத்து, நடாத்தி, பாரத நாட்டிற்காகத் தன்னுடைய உயிரையும் காணிக்கையாக்கிய மகாத்மாவின் வாழ்க்கை வரலாறு உலக சரித்திரத்தில் எழுதப்பட்ட அழியா சுவடுகள் ஆகும். இவரது பிறந்த நாள் இந்தியாவில் காந்தி ஜெயந்தி என்று கொண்டாடப்படுகிறது.



இறோம் சானு சர்மிளா அல்லது இரோம் ஷர்மிளா (Irom Chanu sharmila) மணிப்பூரின் இரும்பு மங்கை என அழைக்கப்படுபவர். இவரை அவரது வட்டாரமொழி மக்கள் மெங்வெளபி (நெருப்புப் பெண்) என அழைக்கின்றனர். இவர் நவம்பர் 2, 2000 ஆம் நாளிலிருந்து மணிப்பூரில் நடந்த வன்முறைகளுக்கும் மற்றும் பிற வடகிழக்குப் பகுதிகளில் அதன் விளைவுகளுக்கும் காரணமான ஆயுதப்படை (சிறப்பு அதி காரங்கள்) சட்டம், 1958ஐ [ASF PA] இந்திய அரசாங்கம் மீளப் பெறவேண்டும் என்று வலியுறுத்தி உண்ணாநிலைப் போராட்டம் இருந்துவருகிறார். இது 500 வாரங்களுக்கும் மேல் தொடர்ந்து வருகிறது. இதுவே உலகின் நீண்ட உண்ணாப் போராட்டமாகும். நவம்பர் 2, 2000 அன்று மணிப்பூரின் இம்பால் பள்ளத்தாக்கில் உள்ள மலோம் என்ற சிற்றூரில் இந்தியப் படைத்துறையின் துணைப்படையான அசாம் ரைபிள்சினால் பேருந்து நிறுத்தமொன்றில் நின்றிருந்த பத்து குடிமக்கள் சுடப்பட்டு இறந்தனர். இந்நிகழ்வு பின்னாளில் "மலோம் படுகொலை" என மனித உரிமை தன்னார்வலர்களால் குறிப்பிடப்படுகின்றது. 1988ஆம் ஆண்டின் தேசிய சிறார் வீரதீர விருது பெற்ற 18 வயது சினம் சந்திரமணி மற்றும் 62 வயதுடைய பெண்மணி லெய்சங்பம் இபெடோமி உட்பட கொலையுண்டவர்களின் படங்களை உள்ளூர் நாளேடுகள் விவரமாக பதிப்பித்திருந்தன. நான்காம் நிலை கால்நடை ஊழியரொருவரின் மகளான 28 வயது சர்மிளா இந்தப் படுகொலைக்கு எதிராக உணவு மற்றும் நீர் உண்ணாப் போராட்டத்தை மேற்கொண்டார். அவரது உடன்பிறப்பு இறோம் சிங்கஜித் சிங்கின் கூற்றுப்படி "சிறுவயது முதலே வியாழக்கிழமைகளில் உண்ணாதிருக்கும் விரதத்தை கடைபிடிக்கும் சர்மிளா கொலை நிகழ்ந்த நாள் வியாழக்கிழமையாக அமைந்திருந்த காரணத்தால் தனது உண்ணாநிலையை அப்படியே தொடர்ந்தார். போராளி என ஐயுறும் எவரையும் காலவரையின்றி காவலில் வைக்க அதிகாரம் வழங்கும் ஆயுதப் படைகள் (சிறப்பு அதிகாரங்கள்) சட்டம், 1958 (AFSPA) மீளப்பெற வேண்டும் என்பதே இவரது முதன்மையான கோரிக்கையாகும். சித்திரவதை, வலிய காணாமல் போவது, நீதித்துறைசாரா தண்டனைகள் போன்றவற்றிற்கு இந்த சட்டமே காரணமென மனித உரிமை தன்னார்வலர்களும் எதிர்க்கட்சிகளும் குற்றம் சாட்டுகின்றன. உண்ணாநிலைப் போராட்டம் துவங்கிய மூன்றாம் நாளே சர்மிளா தற்கொலை செய்து கொள்ள முயன்றதாக காவல் துறையால் கைது செய்யப்பட்டு பின்னர் நீதித்துறை காவலில் வைக்கப்பட்டார். அவரது உடல் நிலை மிகவும் மோசமடைந்ததால், காவல்துறையினர் அவருக்கு வலுக்கட்டாயமாக, மூக்கு குழாய் வழியே உணவு வழங்கத் துவங்கினர். இந்தியக் குற்றவியல் சட்டத்தின்படி தற்கொலைக்கு முயலும் ஒருவரை ஓராண்டுக்கே சிறையிலடைக்க முடியும் என்பதால் அன்றிலிருந்து இறோம் சர்மிளா ஒவ்வொரு ஆண்டும் விடுதலை செய்யப்பட்டு மீண்டும் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்படுகிறார். சர்வாதிகாரத்திற்கு எதிராகப் பேராடும் நம்பிக்கைக்கு சர்மிளா பானு ஓர் வாழும் உதாரணமாகத் திகழுகின்றார்.



சுற்றுச் சூழல் மற்றும் மனித உரிமைகள் விடயம் தொடர்பாகச் செயலாற்றி வந்த ஆபிரிக்கப் பெண்மணியான வங்காரி மாத்தாய்க்கு 2004 ஆம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. சமாதானத்துக்கான நோபல் பரிசுபெற்ற முதல் ஆபிரிக்கப் பெண்மணி என்ற பெருமைக்குரியவர். பெண்களை ஒருங்கிணைத்து, காடுகளை அழிப்பதற்கு எதிரான போராட்டத்தை அவர் முன்னெடுத்து வந்தார். அதே போல அநீதிக்கு எதிராகவும், ஊழலுக்கு எதிராகவும் அவர் அதிகாரிகளுடன் தொடர்ந்து மோதி வந்தார். மரங்களை நடும் போது, அமைதி மற்றும் நம்பிக்கைக்கான விதைகளை நாம் நடுகிறோம் என்று வங்காரி மத்தாய் 2004 ஆம் ஆண்டு நோபல் விருதைப் பெற்ற பிறகு ஆற்றிய உரையில் தெரிவித்திருந்தார். சீரழிந்து வரும் சமூக மற்றும் சுற்றுச்சூழலில், ஏழ்மையிலும், துன்பத்திலும் இருக்கும் பெண்களுக்கு மரங்கள் பெரும் உதவியாக இருக்கும் எனவும் வங்காரி மத்தாய் அப்போது தெரிவித்தார். இதன் மூலம் அவர்களுக்குத் தேவையான நீர், விறகு மற்றும் உணவு போன்றவை போதிய அளவுக்கு கிடைக்கும் எனவும் அவர் கூறியிருந்தார். கென்ய அரசின் காடுகளை அழிக்கும் திட்டத்துக்கு எதிராக, 1977 ஆம் ஆண்டு கென்யாவில் கிரீன் பெல்ட் மூவ்மெண்ட் எனப்படும் பசுமை இயக்கத்தை தொடங்கிய அவர் 47 மில்லியன் மரங்களை நட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய ஆளுமை இரண்டு வருடங்களுக்கு முன்னர் புற்றுநோயின் காரணமாக மரணத்தை அணைத்துக்கொண்டது.



போராட்டங்களுக்குப் பல வடிவங்கள் உண்டு என்பதற்கு நாங்கள் நேரில் கண்டு தரிசித்த ஆளுமை. அகிம்சைப் பாதையில் ஒரு புரட்சித் தீயை ஏற்றிவிட்ட கொழுந்து. விடுதலைப் புலிகளை ஆயதப் போராளிகளாகவும், வன்முறையாளர்களாகவும் மட்டுமே பார்க்கும் கண்களுக்கு அவர்கள் குறித்ததான மாற்று விம்பத்தை உருவாக்கியவர் திலீபன். தனது கோரிக்கைகளுக்கு இந்திய தேசம் செவிசாய்க்கும் என நம்பி உண்ணாநோன்பு எனும் அகிம்சை ஆயுதத்தைக் கையில் எடுத்து சமாதானத்தின் வழி நின்று சாதிக்க துணிந்தவர். அத்தகைய ஒருவரை உலக சமாதான தினத்தில் நினைவு கூருவது அவசியமானதே.

முதலாம் குறுக்குத்தெரு, மணிப்புரியைச் சேர்ந்த யூட் பிறைனர் அன்ரன் றஞ்சித்குமார் அவர்களால் 20.09.2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.